# "இலங்கையில் இராணுவ ஆட்சி ஏற்படுத்த முயற்சியா?

## முதலில் பழிவாங்கப்படுபவர் பிரதமரே தான்" — எஸ்.ஜே. வி

Registred as a News Papar in Ceylon விலைசதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 10
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மாசி 9 ஜுல்ஹஜ் 13 வெள்ளிக்கிழமை [20-2-70]

உங்களுக்குத் தேவையான
தங்க, வைர நகைகளுக்கு
பொ. அம்பலவாண
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 7119 தந்தி: வைரம்

காலம் பெறுமதியானது.
துரித சலவைக்கும்
தூய வெண்மைக்கும்
MILKWHITE V.M.K SOAP Washing Powder
மில்க்வைற்
சலவைப் பவுடர்
பாவியுங்கள்.
பாவித்த வெற்றுறைகளைச் சேகரித்து அனுப்பி பலவித பரிசுகளைப் பெறுங்கள்.
— மில்க் வைற் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். —

மல்லாகம், வியாழன்

"தமிழ்ப் பகுதிகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுவரும் அட்டூழியச் செயல்கள் தகுந்த முறையில் அரசாங்கத்தால் கட்டுப்படுத்தத் தவறப்படுமானால் விரைவில் இலங்கையில் இராணுவ ஆட்சி ஏற்படலாம். இதனால் பிரதமரே முதலில் இராணுவத்தால் பழிவாங்கப்படுவார். இதைப் பிரதமர் உணர்ந்து நடக்கவேண்டும்."

இவ்வாறு காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஏழாலை வடக்கு ஆலங்கட்டைப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. எஸ். வி. பொன்னையா தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. செல்வநாயகம் எம். பி., ஏழாலை வடக்கு-கட்டுவன் தெற்கு தமிழரசு வாலிப முன்னணிக் காரியாலயத்தைத் திறந்து வைத்துப் பேசினார்.

திரு. செல்வநாயகம் மேலும் பேசியதாவது:

"வடபகுதியில் இராணுவத்தினரின் அட்டகாசம் பெருமளவு தலைதூக்கி, மக்கள் இம்சைக்குள்ளாகிவருகின்றனர். மேலும் தமிழ்ப் பகுதிகளில் இராணுவத்தை அதிகரித்து தமிழ் மக்களைத் தாக்கி, அடக்கியாள ஆர். ஜி. சேனநாயக்கா போன்றோர் விரும்புகின்றனர்.

மத்திய கிழக்கு நாடுகளில் இடம்பெற்றுவரும் இராணுவத்தினரின் நடவடிக்கைகளைப் பிரதமர் நன்கு உணரவேண்டும். இந்நாடுகளில் நடைபெறுவதுபோல நமது தேசத்திலும் விரைவில் இடம்பெறலாம்.

இன்று தமிழ் மக்களைத் தாக்கும் இராணுவத்தினர் சிங்கள மக்களிடத்திலும் கைவைக்கப் பின்நிற்கமாட்டார்கள். இப்பயிற்சி நீடித்தால் பிரதமர்தான் முதலில் இராணுவத்தால் பழிவாங்கப்படுவார். அரசாங்கத்தை வீழ்த்தி, ஜனநாய

ஆட்சிமன்ற உறுப்பினர்களையும், சாதாரண பொதுமக்களையும் அவர்கள் தாக்கி வருவதிலிருந்து தெரியவருகிறது.

பருத்தித்துறை எம். பி. தமிழராக இருந்தபடியால் எம். பி. மீது தாக்குதல் நடத்திய இராணுவத்தினருக்கு எதிராக அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இராணுவத்தினர் மத்தியில் அடையாள இலக்கங்கள் இல்லை. யூனிபோம் உடை ஒன்றாக இருப்பதால் வித்தியாசம் காண முடியாது. முகாம்களில் இருந்து வெளியேறும் இராணுவ வீரர்கள் கையெழுத்திட்டுப் போகும் இடமெதுவும் எழுதிவைத்துவிட்டுச் செல்வதில்லை. தமிழ்ப் பகுதியில் இராணுவ வீரர்கள் மது அருந்திவிட்டு மக்களிடையே கிளர்ச்சி செய்கின்றனர். பொலிஸாரைப் போன்று இராணுவத்திற்கும் இலக்கம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழினம், தமிழ்மொழி, பிரதேசம் போன்றவற்றைப் பாதுகாக்க போராட வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் ஒன்றுகத் தமிழர் ஐக்கியப்பட்டுச் செயற்படவேண்டும்."

கிளிநொச்சி எம் பி பண்டிதர் கா பொ இரத்தினம் சாவகச்சேரி எம் பி திரு வ ந நவரத்தினம் வட்டுக்கோட்டை எம் பி திரு. அமிர்தலிங்கம். உடுவில் எம் பி திரு வீ தருமலிங்கம், செனட்டர் எஸ் நடராசா, திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம், எம். கே அந்தனிசில், அட்வகேட் எம் ஆலாலசுந்தரம், ஆகியோரும் பேசினர். கூட்ட ஆரம்பத்தில் தமிழரசுக் எம் பிக்கள் குப்மான்,

# தென் வியட்னமில் அமெரிக்கர் நடத்தியுள்ள இன்னொருபடுகொலை

### பொலிஸ் தாக்குதலை எதிர்த்து

## வர்த்தக ஊழியர் சங்கம் நேற்று ஊர்வலம்நடத்தியது

கொழும்பு, வியாழன்

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த 13,000 ஊழியர்கள் இன்று காலை 10 மணியளவில் தங்களது வேலைஸ்தலங்களை விட்டு வெளியேறி கொழும்பு நகர வீதிகளில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினார்கள்

இம்மாதம் 12-ம் திகதி கார்சன்ஸ் கம்பெனியில் சுலோகம் தாங்கிநின்றவர்களைப் பொலிசார் தாக்கியதை எதிர்த்து இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடாத்தினார்கள்

பொலிசாருடைய வன்முறைச்செயல்களைக் கண்டிக்கும் கோஷங்களை ஊர்வலத்தினர் எழுப்பினர். இன்று பகல் ஒரு மணிக்கு ஊழியர் வேலைக்குத் திரும்பினர்.

(சி பி ஏ)

### விஞ்ஞான ஆய்வு கூடம்பற்றி பேசுவர்

மல்லாகம், வியாழன்

வடமாநில வித்தியாதிகாரி திரு. எஸ். தணிகாசலம், கோப்பாய் எம், பி திரு. எஸ். கதிரவேற்பிள்ளை, காங்கேசன்துறை எம். பி திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியோர் இம்மாதம் 21-ம் திகதி வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திற்கு விஜயம் செய்து பெற்றோர்-ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுடன் விஞ்ஞான ஆய்வுகூட விஸ்தரிப்பு, உயர்தர வகுப்பு வைத்தல் பற்றி கலந்து பேசி ஆராயவிருக்கின்றனர்.

## நூறு ஆண்கள், குழந்தைகள் பெண்களை சுட்டுத் தள்ளினராம்

### டெலிவிஷன் நிறுவனம் வெளியிடும் திடுக்கிடும் தகவல்

நியூயோர்க், பெப். 19

**தென்வியட்னமில் அமெரிக்கத்துருப்புகள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடத்தியுள்ள இன்னொரு படுகொலை பற்றிய விபரங்கள் கிடைத்திருப்பதாக அமெரிக்க வானொலி தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று அறிவித்திருக்கின்றது.**

தென்வியட்னமில் மைலாய் என்ற இடத்தில் அமெரிக்கசிப்பாய்கள் 1968-ம் ஆண்டு படுகொலைகள் நடத்திய அதே தினத்தில் இந்த நாசகார சம்பவமும் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

1968-ம் ஆண்டு மைலாய்

அமெரிக்க சிப்பாய்கள் இந்தக்கிராமத்துக்கு வந்து சேர்ந்தபொழுது சிறுவர்கள் அவர்களைப்பார்க்க ஓடினார்களாம் அப்பொழுது குண்டுகளை எறிந்தும் துப்பாக்கியால் சுட்டும் அமெரிக்கர் படுகொலை செய்தார்கள்.

### தபால் யூனியன்கள் வேலைநிறுத்த முயற்சி

கொழும்பு, வியாழன்

களுத்துறை மாவட்ட தபால் ஊழியர் வேலைநிறுத்தம் விரைவில் தீர்க்கப்படாவிட்டால் மற்றைய பகுதிகளிலுமுள்ள ஊழியர்களை

# "கல்விகலாச்சார விஷயங்களில் அரசியல் கலக்கக் கூடாது"

### அ. இ. தமிழாசிரியர் சங்கம் சாட்சியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் கலக்கக் கூடாது"

### அ. இ. தமிழாசிரியர் சங்கம் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன்

"பல்கலைக்கழகம் அமைய வேண்டிய இடம் பற்றிய பிரச்சினை ஓர் அரசியல் சச்சரவுபோலிருக்கிறது. தமிழரின் மொழி, கலாச்சாரம் போன்றவற்றைப் பாதுகாப்பதில் அரசியல் சச்சரவு இடம்பெறுவதை ஆசிரியர்களாகிய நாம் வெறுக்கின்றோம். கல்வி, கலாச்சார விஷயங்கள் அரசியற் பிரச்சினைக்குள் கலக்கப்படக் கூடாது. சிங்களவர், தமிழர் என்ற வேற்றுமையின்றி உயர்தரக் கல்வி பெறும் தகைமையுடைய ஒவ்வொரு மாணவனுக்கும் சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டும். எனவே கொழும்பு, பேராதனை போன்றவற்றை ஒத்த பல்கலைக்கழகம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவக் கோருகிறோம்.

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கப் பிரதிநிதிகள் குழு, நேற்று பல்கலைக்கழக விசாரணைக் கமிஷன் முன்னிலையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தனர். இக்குழுவில் திருவாளர்கள் இ. கந்தையா, க. இ. குமாரசாமி, ரி. இராஜேந்திரம், பண்டிதர் எஸ். கே. தம்பையா ஆகியோர் சென்றிருந்தனர்.

இக்குழுவினரின் சாட்சியம் மேலும் கூறுவதாவது: பூரணத்துவம் வாய்ந்த சர்வ கலாசாலைக்கு இடம் தெரிவது திட்டமிட்டுக் கருமமாற்றி சிந்திக்கப்படவேண்டியதாகும். இலங்கை சர்வ கலாசாலைகளின் அனுபவம் ஒரு கால் நூற்றாண்டுக்குள்ளானவை. இந்த அனுபவம் முழுமை பெற்றதெனக் கூற முடியாது. பேராதனைக்கு இடம் தெரிந்த காலத்தில் வேண்டிய நிலவசதி, சுவாத்திய நிலைமை, பெரிய நகரங்களுக்கு இடையிலுள்ள தூரங்கள் பற்றி எல்லாம் சிந்திக்கப்பட்டன. அங்ஙனமே வடக்கு, கிழக்கு மாணவர்களுக்கானபல்கலைக் கழகம் நிறுவும்போதும் சிந்தித்தல்வேண்டும். யாழ்ப்பாணத்தில் உயர் கல்வி கற்க ஏராளமான மாணவர் தொகையுண்டுதான். ஆனாலும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருமலை, மட்டக்களப்புப்பகுதிகளிலுள்ள திறமையானமாணவர்களும் தொகையில் குறைந்தாலும் உயர் கல்வி பெறும் வாய்ப்பை இழத்தல்கூடாது. எனவே அதிக காணி வசதி நீர் வளம் மேற்கூறிய பிரதான நகரங்களுக்குக் கூடிய தான அண்மை போன்ற நிலைமைக்குள்ளான கிளிநொச்சியில் பல்கலைக்கழகத்தை அமைக்கலாமென நாம் கருதுகின்றோம்.

அரசாங்கத்தின் பொருளாதார நிலை இதற்கு இடம் கொடுக்காத பட்சத்தில் யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகத்தை உடனடியாக நிறுவலாம். யாழ்ப்பாணக் கல்லூரியில் விஞ்ஞானபீடத்தையும், யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் மருத்துவப் பகுதியும், திருமலையில் என்ஜினியரிங் பகுதியும், வவுனியா, மட்டக்களப்புப் பகுதியில் விவசாய, கைத்தொழில் வாணிபப் பிரிவும், இராமநாதன் கல்லூரியில் கலைப்பிரிவு, நிர்வாக அமைப்புக் கந்தோர் போன்றவற்றை அமைத்துக்கொள்ளலாம். (மல். நி)

---

1968-ம் ஆண்டு படுகொலைகள் நடத்திய அதே தினத்தில் இந்த நாசகார சம்பவமும் இடம் பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

1968-ம் ஆண்டு மைலாய் என்ற கிராமத்தில் நூற்றுக் கணக்கான கிராமவாசிகள் அமெரிக்கசிப்பாய்களால்படுகொலை செய்யப்பட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இதில் சம்பந்தப்பட்ட சிப்பாய்களும் அதிகாரிகளும் தற்பொழுதுவிசாரிக்கப்பட்டு வருகிறார்கள்.

இந்தச்சம்பவம் நடைபெற்ற அதேநாளில் இன்னொரு கிராமத்திலும் அமெரிக்க ராணுவத்தினர் 90 அல்லது 100 கிராமவாசிகளைப் படுகொலை செய்த செய்தி இப்பொழுது கிடைத்திருக்கிறதாம்.

இந்தப்படுகொலை நடந்த பொழுது உயிர்தப்பிய வயோதிபர் ஒருவர் தகவல் தருகையில் அமெரிக்க சிப்பாய்கள் தென் வியட்னாமியரின் பெரிய கிராமமொன்றில் பிரவேசித்து, ஆண், பெண், குழந்தைகள் என்று பாராமல் துப்பாக்கியால் சுட்டதாகவும் வெடிகுண்டுகளை வீசியதாகவும் கூறினார். அவர்களைப்பார்க்க ஓடினோர்களாம் அப்பொழுது குண்டுகளை எறிந்தும் துப்பாக்கியால் சுட்டும் அமெரிக்கர்கள் படுகொலை செய்தார்கள்.

---

### இன்று

வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரன் ஆலயத்தில் இன்று பகல் 10 மணிக்கு நடேசர் அபிஷேகமும் பூசையும் நடைபெறும்.

மாலை 6 மணி முதல் 7 மணி வரை வித்துவான் திரு. க. கி. நடராஜன் பெரியபுராண விரிவுரைத்தொடரில் 'மாங்கனி பெற்ற மயில்' என்னும் பொருள் பற்றி பிரசங்கம் செய்வார்.

---

### பதவி உயர்வு

உடுவில், வியா

குருநாகல் அரசினர் ஆஸ்பத்திரியில் எழுதுவினைஞராக கடமையாற்றும் திரு. ரி. பூபாலசிங்கம் பொது சேவைக் கமிஷனரால், ஆஸ்பத்திரி எழுதுவினைஞர் சேவையின் முதலாம் தரத்திற்கு பதவிஉயர்வு செய்யப்பட்டுள்ளார்.

---

கொழும்பு, வியாழன்

களுத்துறை மாவட்ட தபால் ஊழியர் வேலைநிறுத்தம் விரைவில் தீர்க்கப்படாவிட்டால் மற்றைய பகுதிகளிலுமுள்ள ஊழியர்களையும்வேலைநிறுத்தமொன்றை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை தபால் பகுதி யூனியன்கள் செய்துவருகின்றனர். (சி. பி. ஏ.)

---

...கைவைக்கப் பின்நிற்கமாட்டார்கள். இப்பயிற்சி நீடித்தால் பிரதமர்தான் முதலில் இராணுவத்தால் பழிவாங்கப்படுவார். அரசாங்கத்தை வீழ்த்தி, ஜனநாயகத்தைப் புதைத்து இராணுவ ஆட்சி நிலவச்செய்யவே இராணுவத்தினர் விரும்புகின்றனர் என்பதை

...கரசி அமிர்தலிங்கம், எம். கே அந்தனிசில், அட்வகேட் எம் ஆலாலசுந்தரம், ஆகியோரும் பேசினர். கூட்ட ஆரம்பத்தில் தமிழரசுக் எம் பிக்கள் குப்பிளான், சுட்டுவன் சந்திகளில் இருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

---

## "கைப்பற்றிய பகுதியை ஆள்வதுபோல் நடக்கிறது"

### வடபகுதி இராணுவம் பற்றி வல்வையில் தீவுப்பகுதி எம். பி.

வல்வெட்டித்துறை, வியா.

புதிதாக கைப்பற்றிய ஒரு பிரதேசத்தை ஆளுவது போல் இராணுவம் இன்று தமிழ் பகுதிகளைஆளுகிறது. இந்த நிலை நீங்கி மக்கள் பயம் இன்றி அமைதியான வாழ்வுபெறதமிழர் சுயாட்சியைப் பெற்றால்தான் முடியும்"

தமிழர் சுயாட்சிக்கழகத் தலைவர் திரு, வ. நவரத்தினம் எம். பி. நேற்று வல்வெட்டித்துறையில் நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

வல்வெட்டித்துறை உதய சூரியன் கடற்கரை மைதானத்தில் திரு சோதிநாராயணசாமிதலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. நவரத்தினம் தொடர்ந்து கூறியதாவது:

அமைதியாக வாழுகின்ற மக்கள்மீது இராணுவம் நடந்துவரும் முறைகளை ஒழித்துக்கட்டுவதற்கு தமிழராகிய நாம் கண்டிப்பாக முக்கிய கவனம் செலுத்த வேண்டும். இன்றுசிங்களம் நம்மை விழுங்கிவருகிறது. அரசாங்க தஸ்தாவேசுகள் அனைத்தும் சிங்களமயமாகவேதான் இருக்கிறது.

சிறந்த கிராமசபையாக தெரிவுசெய்யப்பட்ட தெல்லிப்பளைக் கிராம சபைக்கு பிரதமரால் வழங்கப்பட்ட பரிசுக்கேடயம் தனிச்சிங்களமயமாகவே இருந்தது.

எமக்கென ஒரு தனியரசு இருக்கவேண்டும். நாம் சுதந்திரமாக அரசாண்ட இனம். தமிழராகிய நாம் சிறுபான்மை இனம் அல்ல. 1883-ம் ஆண்டின் பின்னர் தான் நாம் சிறுபான்மையானோம். நாம் தனி நாட்டைப் புரட்சிமூலமோ அல்லது அகிம்சை மூலமோ பெறலாம் என்பதை மக்களேதீர்மானிக்கவேண்டும்.

---

## இராணுவ தாக்குதல் பற்றி ஒத்திவைப்பு பிரேரணை

### தமிழரசு 24-ம் திகதி கொண்டுவரும்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடபகுதியில் இராணுவத் தாக்குதல் குறித்து ஆட்சி மன்றத்தில் இம்மாதம் 24-ந் திகதி ஒத்திவைப்பு பிரேரணையொன்றை தமிழரசுக் கட்சி கொண்டுவரவிருப்பதால், அன்றைய தினம்பிற்பகல் 2 மணிக்கு ஆட்சிமன்றத்துக்கு சமூகமளிக்கும்படி தமிழரசுக்கட்சிஎம். பி.க்கள் எல்லாருக்கும் தமிழரசுக் கட்சி கொறடா பண்டிதர் கா. பொ. இரத்தினம் அழைப்பு விடுத்துள்ளார்.

அன்று காலை கொழும்பிலுள்ள திரு. எஸ். ஜே. வி. வீட்டில் இப்பிரேரணை சம்பந்தமான ஆலோசனைக் கூட்டமொன்றும் நடைபெறவிருப்பதாக...

...ஞர்...

இதில...

...ஷ்ண மடத்...

சுவாமி ஸ்ரீரங்க...

கலந்துகொண்டு பேசினர்.

---

### பொதுத் தேர்தல் லிகிதராக நியமிக்க

## அரசாங்க ஊழியர் புள்ளி விபரம்கோருகிறார் திறைசே... செயலா...

கொழும்பு, வியாழன்

அடுத்தபொதுத்தேர்தலில் லிகிதராகக்கடமையாற்றுவதற்கு நியமிக்க அரசாங்க ஊழியர்களின் புள்ளிவிபரங்களைத் தெரிவிக்கும்படி ஒவ்வொரு அரசாங்க இலாகாக்களையும் சேர்ந்த இலாகாத் தலைவர்களையும் நிரந்தரக் காரியதரிசிகளையும் திறைசேரிச் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்தியாவசிய... விடுபட்டுள்ள அரசா... யர்கள் தவிர்ந்த ஏனை... யர்களின் புள்ளிவிப... ளையே அறிவிக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

அடுத்தமாதம் 14ம் திகதிக்கு முன்னர் இந்த விபரங்களைத்தரும்படி கேட்கப்பட்டுள்ளார்.

---

டாக்டர் தகநாயக்கா சொல்கிறார்:-

## "நமது பிரதம மந்திரி கடவுளின் பிரதிநிதி இலங்கையை காக்கவே நம்முடன் இருக்கிறார்"

(நமது காலி நிருபர்)

"நமதுபிரதமர் கடவுளின் ஒரு பிரதிநிதி, இலங்கை மாதாவைக் காப்பாற்றுவதற்காக அவர் நம்மிடையே இருக்கிறார்" இவ்வாறு உள்நாட்டமைச்சர் திரு. டபிள்யு தகநாயக்கா கூறினார்.

ஹினிதும தேர்தல் தொகுதியில் நாகொட என்ற இடத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் திரு. தகநாயகா பேசினார்.

கடந்தவாரம் வரையில் நான் மந்திரிசபையில் ஒரு சுயேச்சை மந்திரியாகவே இருந்துவந்தேன் இப்பொழுது நாட்டைக் காப்பாற்றுவதில் பிரதம மந்திரிக்கு உதவும் பொருட்டு ஐக்கிய தேசியக்கட்சியில் சேர்ந்துவிட்டேன் என்று திரு. தகநாயக்கா அறிவித்தார்.

நாகொடையில் டி. ஆர். ஓ. காரியாலயத் திறப்பு விழாவில் அவர் தலைமை வகித்துப்பேசினார்.

1965-ம் ஆண்டு தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்தபொழுது அரசாங்க கஜானா காலியாகவே கிடந்தது. இதனால் எனது திட்டங்கள் பல செயல்படுத்தமுடியாமல் போய்விட்டன என்றார் திரு. தகநாயக்கா. பதுளை மாவட்டத்தில் மையங்கனைக்கென தனி நிர்வாக மாவட்டம் ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்ற திட்டம் செயல்படமுடியாமல் போனதை அவர் சுட்டிக் காட்டினார்.

கடந்த நாலரை ஆண்டுகளில் தேசிய அரசுசெய்துள்ள சேவை அடுத்த 50 ஆண்டுகளுக்குப்போதும். அரசியல் கருத்துவேறுபாடு எதுவாய் இருந்தாலும் அடுத்த தேர்தலில் தேசிய அரசாங்கத்தையே பதவிக்கு அனுப்ப வேண்டும் என்றுஅவர் கேட்டுக்கொண்டார். வேறு பலரும் பேசினர்.

---

## சுவீப்முடிவுகள்

கொழும்பு. வெள்ளி

நேற்று ஹற்றனில் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 286-வது சுவீப் ட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

1- பரிசு

28 L 0014 ரூ. 100,000

2-ம் பரிசு:

33 W 0127 ரூ. 40,000

3-ம் பரிசு:

08 S 0679 ரூ. 10,000

ரூபா743-20 சதம்பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 21 Z 0764 | 09 A 0874 |
| 35 W 0012 | 09 O 0001 |
| 38 S 0732 | 03 P 0534 |
| 30 Q 0724 | 28 X 0463 |
| 43 E 0798 | 15 N 0789 |
| 17 N 0333 | 46 Z 0673 |
| 20 G 0796 | 13 J 0333 |
| 34 H 0131 | 22 L 0528 |
| 34 C 0415 | 19 Q 0792 |
| 09 E 0545 | 09 C 0467 |
| 36 F 0804 | 10 X 0254 |
| 05 C 0744 | 08 R 0247 |
| 08 R 0678 | 07 H 0653 |
| 20 H 0786 | 33 J 0859 |
| 05 N 0087 | 21 Y 0894 |
| 26 C 0501 | 34 D 0286 |
| 36 W 0116 | 04 A 0675 |
| 22 R 0048 | 09 N 0353 |
| 08 B 0044 | 10 T 0774 |
| 38 X 0464 | 13 X 0345 |

| | |
|---|---|
| 09 T 0931 | 44 S 0842 |
| 16 X 0517 | 26 H 0002 |
| 03 O 0629 | 20 E 0421 |
| 04 L 0902 | 26 B 0657 |
| 36 F 0890 | 29 P 0183 |
| 12 K 0452 | 18 W 0534 |
| 30 U 0909 | 28 T 0610 |
| 32 N 0513 | 42 V 0115 |
| 01 A 0058 | 27 A 0504 |
| 10 P 0623 | 17 U 0019 |
| 40 E 0748 | 40 W 0921 |
| 22 C 0983 | 18 L 0011 |
| 01 Z 0969 | 14 L 0018 |
| 35 C 0934 | 07 H 0411 |
| 44 E 0215 | 46 L 0587 |
| 20 D 0976 | 37 C 0927 |
| 07 J 0074 | 20 S 0624 |
| 26 P 0996 | 44 K 0137 |
| 07 E 0473 | 06 O 0800 |
| 18 G 0779 | 42 S 0718 |
| 03 O 0543 | 36 Q 0010 |
| 10 C 0650 | 17 R 0668 |
| 36 V 0803 | 34 S 0988 |
| 03 P 0732 | 11 O 0399 |
| 33 W 0646 | 42 X 0793 |
| 20 Z 0455 | 44 B 0910 |
| 10 V 0574 | 10 M 0315 |
| 16 Z 0878 | 33 Q 0953 |
| 43 D 0856 | 44 E 0380 |
| 09 E 0467 | 11 J 0347 |

(இவை உறுதிப்படுத்த வேண்டியவை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

எமது ஸ்தாபனத்தில் கூலி வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை நல்ல சம்பளம் போனஸ் வழங்கப்படும். கல்லர் வேலை தெரிந்தவர்களுக்கு விசேஷ சலுகை வழங்கப்படும். தொடர்பு கொள்ளவும். மாப்பியன் மில், மானிப்பாய், சுதுமலை. 1859

வீடும் வளவும்:

7 பரப்பு, 5 அறைகளுடன் முழு வசதியும் அடங்கிய வீடும் வளவும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். வி. மகேந்திரன், நரியிட்டான், மல்லாகம். 1863

நயினாதீவு ஸ்ரீகணேசா சனசமூகநிலையத்திற்கு மணிவாசகப்பெருமானின் ஒரு விக்கிரகம் தேவைப்படுகிறது. இதனை அன்பளிப்பாக வழங்க விரும்புவோர் 28-2-70 திகதிக்கு முன்பு மேற்படி நிலையத் தலைவருடன் தொடர்பு கொள்ளவும் 1871

நெசவு செய்வதற்கும் நூல் சுற்றுவதற்கும் அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை நேரில் வரவும். சின்னத்துரை, மொமம்சாக் மாளிகை, 11/D, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம். 1869

### விற்பனைக்கு

எம். ஜி. ஆர்., சிவாஜி, சாயிபாபா, மற்றும் கத்தோலிக்க, சைவசமய தெய்வங்களினதும், அரசியல் தலைவர்களினதும் உருவங்கள் பதித்த மோதிரங்கள்-மெடல்கள் - பென்டன்கள் விற்பனைக்குண்டு. உறுதியான றபர் ஸ்டாம்புகளும் வீட்டுப் பெயர்களும் தயாரிக்குமிடம் எஸ்ரிஎம் இன்டஸ்றி, பழைய பஸ்நிலையத்துக்கு முன்பாக, 1/3, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 1873

### WANTED

Required immediately one experienced Foreman for service station. One salesman for MOTOR SPARES. FIRM in Jaffna Town. Security required. Apply, stating particulars. Attach testimonials (copies). Apply-Advt. No: 1866 C/o Eelanadu, Jaffna. 1866

### கல்வி

விஞ்ஞான பாடங்கள் சிறந்த முறையில் கற்பிக்க ஆசிரியர்கள் உண்டு. பெற்றோர் தொடர்பு கொள்ள

அரசாங்கக் கேள்விகள்

நீர்ப்பாசனத் திணைக்களம்

என். 1118- அனுராதபுரம் உபபிரிவின் கீழ் உள்ள வன்னியன்குளம் பகுதியில் ''தொழிலாளரின் நிரந்தர இரட்டைக் குடிசைகள்'' கட்டுதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

வித்தியா பகுதி

என். 1131- பாடசாலைக் கட்டிடம், விஞ்ஞான ஆய்வு கூடம், கிணறு, மலசலகூடம் ஆகிய வேலைகட்கான கேள்விப்பத்திரங்கள் கிழக்குப் பிராந்திய கல்வி அதிகாரியினால் மட்டக்களப்புக் கல்விக் கந்தோரில் வைத்து 1970 3-20-ந் திகதி மு.ப. பகல் 10-30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்

மேலதிக விபரங்கட்கு 1970-2-20-ந் திகதிய அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

G. P 1871

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 20—2—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமிநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 பண்ணுரிந்தமிழ், 7-45 மெல்லிசை, 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-30 செய்திச் சுருக்கம்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 அரங்கேற்றம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச் சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடு பாப்பா.

இரவு 6-10 இடைவேளை இசை, 6-15 இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச் சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 வயலின், 7-45 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் பாடல்கள், 9-30 நாடகம், 10-00 நேயர் விருப்பம், 10-30 செய்திச்சுருக்கம்.

## உடுவில் கி. ச.

கிரிக்கெட்

## யாழ். இந்து வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ் இந்துக்கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முதல் இன்னிங்ஸ்ஸில் மொத்தம் 152 ஒட்டங்களைப் பெற்றது. இதில் ரி.துரைசிங்கம் 44 ஓட்டங்களைப் பெற்றார்.

யாழ். இந்து முதல் இன்னிங்ஸில் மொத்தம் 220 ஓட்டங்களைப் பெற்றது, இதில் எஸ். நரேந்திரன் 75 ஓட்டங்களையும், காப்டன் சச்சிதானந்தன் 64 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 2-வது இன்னிங்ஸில் மொத்தம் 170 ஓட்டங்களைப்பெற்றது. தி. ஜெயரட்ணம் 59 ஓட்டங்களைப்பெற்றார்.

யாழ். இந்துக்கல்லூரி 2-வது இன்னிங்ஸில் 104 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்களை இழந்து 3 அதிகப்படியான விக்கட்டுகளால் வெற்றிபெற்றது.

இப்போட்டி யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (தே. நி

மாவட்ட ரீதியில்

## மென்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் ரஞ்சன் பித்தளைத் தொழிற்சாலை வெள்ளிக் கேடயத்துக்கான மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்று யாழ். மாவட்ட ரீதியில் நடைபெறவிருக்கின்றது.

இச்சுற்றுப்போட்டி, யாழ்ப்பாண இளஞ்சிங்க சனசமூக நிலையத்தின் ஆதரவுடன் மிகவிரிவான முறையில் நடைபெறவிருக்கின்றது. இந்தச் சுற்றுப்போட்டியில் வெற்றி பெறும் கோஷ்டிக்கு மேற்படி தொழிற்சாலையின் உரிமையாளர் திரு. எஸ். செல்லத்துரை மிக உயர்ந்த வெள்ளிக்கேடயம் ஒன்றை பரிசளிக்கமுன்வந்துள்ளார்.

இந்தச் சுற்றுப்போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் இளஞ்சிங்க சனசமூக நிலையப் பொறுப்பாளர் திரு. பீ இம்மனுவேல் மேற்கொண்டு வருகின்றார். (தே. நி)

## சித்தன்கேணி

## பிரி அளவை நிபுணர்

கொழும்பு, வியாழன்

இலங்கையில் ஒருவருடகாலம்வரை சேவையாற்றும் நியமனம் பெற்று பிரிட்டிஷ் அளவை நிபுணரொருவர் இங்கு இவ்வாரவிறுதியில் வருகிறார். ஐ. நா. சபையின் சார்பில் பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சு இவருக்கு இந்த நியமனத்தை வழங்கியிருக்கிறது.

திரு ஜே. டபிள்யூ. சிமன்ஸ் இங்கிலாந்திலுள்ள ஹன்டிங்ஸ் அளவை ஆலோசகர் ஸ்தாபனத்தைச் சேர்ந்த நிபுணர் இவர் பெப்ரவரி 20-ந்திகதிபிரிட்டனிலிருந்து இலங்கை நோக்கி பயணமாகிறார்.

திரு. சிமன்ஸ், இலங்கை நில அளவை இலாகாவின் விமான அளவைப் பிரிவில் கடமையாற்றுவார். விமானத்திலிருந்து புகைப்படம் பிடித்து தரையமைப்பை அளவிடும் நுணுக்கங்கள் பற்றி இவர் நிலவளவை இலாகாவினருக்கு ஆலோசனைகள் கூறுவார். நில அளவை இலாகாவினருக்கும், தியத்தலாவையிலுள்ள நிலவளவை நிலப்படவரைதல் நிறுவனத்தினருக்கும் இவர் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்.

இலங்கை அரசாங்கத்தின் நிலவளவை, நிலப்பட வரைதல் நிறுவனத்திற்கு ஐ. நா. விசேஷ நிதித்திட்டம் உதவியளித்து வருகிறது இந்த நிறுவனம் நிலவளவை படவரைதல் துறையில் மாணவர்களுக்குஉயர்தரதொழில் நுட்பப்பயிற்சியை அளிக்கத் திட்டமிட்டுள்ளது.

## கிணற்றுள் வீழ்ந்து மரணம்

சங்கானை, வியாழன்

அண்மையில் விவாகப்பதிவு நடைபெற்று முடிந்த இளம்பெண் ஒருவர் கிணற்றுள் வீழ்ந்து மரணமானார். சண்டிலிப்பாயைச் சேர்ந்த சி. நேசமணி என்பரே இவ்விதம் மரணமானவர்.

காலஞ்சென்ற சிவசம்பு நேசமணியின் மரணவிசாரணையை மரணவிசாரணை அதிகாரி திரு சேனாதிரசா நடத்தினார், சமையல் வேலை முடிந்தபின் குறிப்பிட்ட பெண் கிணற்றடிக்குச் சென்றதாகவும், பின்னர் அதற்குள் வீழ்ந்து கிடக்கக்காணப்

## தமிழைப் பேணின் தமிழ் மக்களைப் பேணவேண்டும்

பருத்தித்துறை, வியா

பழந்தமிழ் நாட்டில் தமிழ் ஏடுகள் அரண்மனைச்சொத்துக்களாக இருந்தன. கோபுர மேடையில் இருந்த தமிழைக் குப்பை மேட்டுக்குக் கொண்டுவந்து பொது மக்களின்சொத்தாக்கியபின்னரே தமிழில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. அன்றுதொடக்கம் இன்றுவரை சாதாரண மக்களே தமிழை வளர்த்து வந்துள்ளனர்.

இவ்வாறு அல்வாய் ஆனந்தசேமகே தமிழ் சிங்கள பௌத்த பாடசாலையில் நடந்த இலக்கிய விழாவின் கருத்தரங்கிற்குத் தலைமைதாங்கிப் பேசிய ஆசிரியர் திரு கே. தங்கவடிவேல் கூறினார்.

பிரபல எழுத்தாளர் கே. டானியல் பேசுகையில்கூறியதாவது:

தமிழைப்பேண வேண்டுமாயின் தமிழ் மக்களின் உயிரை வாழ்வைப் பேண வேண்டும். தமிழைப் பேச மக்களில்லாவிடின் தமிழை நூதனசாலையிற் காணவேண்டிய கட்டமும் ஏற்படலாம். விஞ்ஞானத்துறையில் தமிழ் வளம்பெற்று பிறமொழிகளுடன்சரிசமமாக ஏறுநடைபோட்டால் மட்டுமே தமிழ் வாழமுடியும்,

திருவாளர்கள் க. நடேசன் எஸ், ஆழ்வாப்பிள்ளை ஆகியோரும் உரையாற்றினர்.

இவ் விழாவில் மன்னிப்பு 'அப்பாலேபோ' 'சங்கிலியன்' ஆகிய நாடகங்களும் இடம்பெற்றன.

## சைவசமய அறிவுப்போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

சாந்தையர்மடம் சைவசமய அபிவிருத்திக்கழகத்தினரால் நடாத்தப்படும் வழமையான சைவசமய அறிவுப்போட்டிப்பரீட்சை 21-ம் திகதி காலை நடைபெறவிருக்கிறது. 55 மாணவர்கள்பரீட்சையில்தோற்றுகிறார்கள் பரீட்சையில் வெற்றிபெறுபவர்களுக்கு சிவராத்திரியன்று பரிசில்கள் வழங்கப்பெறும்.

## தமிழ் ஸ்ரீ வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

தீவுப்பகுதி எம். பி. திரு. வ. நவரத்தினத்தின் மகன் செல்வன் ராஜ்மோகனுக்கு எதிராக தமிழ்ஸ்ரீபொறித்த காரைச்செலுத்திச் சென்ற

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஆனைக்கோட்டை திருவள்ளுவர் சேவா மன்ற சனசமூக நிலையக் கூட்டம் திரு ச. மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர் மு. பாக்கியநாதன் உபதலைவர் மா, காணிக்கைச் செல்வம், காரியதரிசி ச. அப்பையா, உப காரியதரிசி மா, பசுபதி, தனாதிகாரி ச, சின்னையா, உப தனாதிகாரி க. தணிகாசலம், பரிசோதகர் மா. பவானந்தம். வ. செல்லையா க. தணிகாசலய் ஆகியோர் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டனர்

0 0 0

சுழிபுரம், வியா.

தொல்புரம் மேற்கு கலைவாணி சன சமூக நிலையத்தினரின் விசேட பொதுக்கூட்டம் சமீபத்தில் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:- தலைவர்: மா. கந்தசாமி, உபதலைவர்: க. உத்திரம், காரியதரிசி: சு பஞ்சாட்சரம், உபகாரியதரிசி: ச. பரமலிங்கம், தனாதிகாரி: மு. நடராசா, உப தனாதிகாரி: சி. பூமிபாசை மூன்று பேர்கொண்ட நிர்வாக குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## மட்டுவிலுக்கு முதலாம் திகதி மின்சாரம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கிராமிய மின்சார விநியோகத்திட்டத்தின் கீழ் சாவகச்சேரி தொகுதியைச் சேர்ந்த மட்டுவில் கிராமத்துக்கு அடுத்தமாதம் முதல் திகதியிலிருந்து மின்சாரம் வழங்கப்படவிருக்கிறது. இதற்கான வேலைகள் யாவும் பூர்த்தியாகிவிட்டன. காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா இதை அங்குரார்ப்பணம் செய்து வைப்பார் எனத்தெரிகிறது:

உடுவில் தொகுதியைச் சேர்ந்த சண்டிலிப்பாய் கிராமத்துக்கும், கோப்பாய் அச்செழு கிராமத்துக்கும் கிராமிய மின்சார விநியோகத் திட்டத்தின்கீழ் விரைவில் மின்சாரம் வழங்கப்படவிருக்கிறது. (மல். நிரு.)

## அடங்காப்பிடாரி

## எதிரிவிடுதலை

ஊர்காவற்றுறை வியா

காரைநகர் வடக்குவாசிகளான இருவர் அதே இடத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணின் இல்லத்தில் புகுந்து பலாத்காரம் செய்ததாகத் தொடரப்பட்ட வழக்குஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது விசாரணையின்பின் நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்.


ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா2-30 மணி
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
நடித்த
தாலி பாக்கியம்

வல்வெட்டித்துறை
றஞ்சனு தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
ஜெமினி-அஞ்சலிதேவி
நடித்த
எல்லோரும் இந்நாட்டு மன்னர்

Now Showing
MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Poya, Predoya 4 Shows
James Stewart HenryFonda
in
FIRE CREEK
(Color)
Coming shortly
HELGA

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 P.M
Poya PrePoya 4 Shows
Frankie Howerd
Sidney James
in
CARRY ON DOCTOR
(Color)


### இலங்கை கூட்டுறவு ஊழியர்சம்மேளனம்

வட பிராந்தியத்தின் அவசர பொதுக்கூட்டம்

காலம்: -21-2-70 சனிக்கிழமை.

நேரம்:- 10-00 மணி.

இடம்:- யாழ். வீரசிங்கம் மண்டபம் (N. D. C. F. Hall)

கூட்டுறவு ஊழியர் அனைவரையும் சமூகம் தரும்படி வேண்டுகின்றோம்.

க. மயில்வாகனம், தலைவர்.

கே. தியாகலிங்கம், காரியதரிசி 1961

இந்திய

## தொழிலாளர் பற்றி அஸீஸ் யோசனை

கோட்டை, வியாழன்

இலங்கையிலிருந்து செல்லவிருக்கும் லட்சக்கணக்கான இந்தியத் தொழிலாளர்களுக்கு இந்தியாவில் காணியும், வேலை வசதியும் கொடுக்க முடியுமாகில் வருடாவருடம் பல்லாயிரக்கணக்கான இந்தியர்கள் இலங்கைக்கு வர எவ்வித காரணமுமில்லை. இந்தியத் தொழிலாளர்கள் இலங்கையிலிருந்து செல்வதால் இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படும், இவ் விளைவுகளை அதிகாரபீடம் ஆலோசித்தால் இலங்கையிலிருந்து தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவுக்கு அனுப்ப மாட்டார்கள்.

இவ்வாறு ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனாப் ஏ. அஸீஸ் தெரிவித்துள்ளார்.


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30 9,30-
பிரிபோயா, போயா 2-30
ஜெமினி-வைஜயந்திமாலா பத்மினி நடித்தது
ஆயிரக்கணக்கான ரஸிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த
ஜெமினியின் பிரமாண்டமான தயாரிப்பு
வஞ்சிக்கோட்டை வாலிபன்
(புதிய கொப்பி)
குறிப்பு:- இரவு 9-55க்கு யாழ்ப்பாணம் திரும்புவதற்கு பஸ் வசதி செய்யப்பட்டிருக்கிறது.

இன்று முதல்
உங்களை மகிழ்விக்க பவனி வருகிறார்கள்
எம். ஜி. ஆர் ஜெயலலிதா


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுருக்கம், 8-03 முஸ்லிம் பாடல்கள், 9-30 நாடகம், 10-00 நேயர் விருப்பம், 10-30 செய்திச்சுருக்கம்.

திரு. பீ இம்மனுவேல் மேற்கொண்டு வருகின்றார். (தே. நி)

அதிகாரி திரு சேனாதிர சா நடத்தினார், சமையல் வேலை முடிந்தபின் குறிப்பிட்ட பெண் கிணற்றடிக்குச் சென்றதாகவும், பின்னர் அதற்குள் வீழ்ந்து கிடக்கக்காணப் பட்டதாகவும், விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மூச்சுத்திணறிய நிலையில் மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அவர் மரணமானார். மூச்சுத்திணறியதால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், வெளளி தீவுப்பகுதி எம். பி. திரு. வ. நவரத்தினத்தின் மகன் செல்வன் ராஜ்மோகனுக்கு எதிராக தமிழ்ஸ்ரீபொறித்த காரைச்செலுத்திச் சென்றதாக யாழ்ப்பாணம் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மீண்டும் ஜுன் 14-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஊர. நி.)

கும் கிராமிய மின்சார விநியோகத் திட்டத்தின்கீழ் விரைவில் மின்சாரம் வழங்கப்படவிருக்கிறது. (மல். நிரு.)

## கல்வி

விஞ்ஞான பாடங்கள் சிறந்த முறையில் கற்பிக்க ஆசிரியர்கள் உண்டு. பெற்றோர் தொடர்பு கொள்ளவும். 39, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 1868

## காணவில்லை

பையன்:

வயது 15, கறுப்பு நிறம், கட்டை, பெரிய தலை, தடித்த சுருட்டை முடி, சூத்தைப் பற்கள் கொண்ட மு. ஆறுமுகம் என்னும் பையனை 69-ம் ஆண்டு மார்கழி 3-ந் திகதி தொடக்கம் காணவில்லை. கண்டவர்கள் தயவு செய்து 'ஈழநாடு' காரியாலயத்திற்குத் தகவல் தெரிவிக்கவும். 1870

## வைத்தியம்

தொய்வு, வாய் நாற்றம், ஊண்கரைதல், பல் வியாதி, ...ரதம் போன்ற வியாதிகளுக்கு உறுதியான சிகிச்சை பெற டாக்டர் V. F வீரசிங்ஹ (M.B.H.S.) அவர்களுக்கு எழுதுங்கள் (நேரில் வந்தும் சிகிச்சை பெறலாம்) டாக்டர் V F. வீரசிங்ஹ (M.B.H.S.) மருத்துவமனை, கருக்குப்பனை, பங்கதெனிய, சிலாபம். 1872

## உடுவில் கி. ச. வெற்றி

யாழ்ப்பாணம வெள்ளி

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு உடுவில் கிராம சபையினரால் நடாத்தப் பட்ட, கரபந்தாட்டப் போட்டியில், உடுவில் கிராம சபைத்தெரிவுக் கோஷ்டியும், சுன்னுகம் பொலிஸ் கோஷ்டியும் மோதிக்கொண்டன ஈற்றில் உடுவில் தெரிவுக் கோஷ்டி 15-9, 13-15, 15-11 ஆகிய புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றிபெற்றது

0 0 0

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு உடுவில் கிராம சபைப்பகுதி உதைபந்தாட்ட தெரிவுக்கோஷ்டிக்கும் கொக்குவில் கிராம சபைப் பகுதி உதைபந்தாட்டத் தெரிவுக்கோஷ்டிக்குமிடையில் சினேகபூர்வமாக நடைபெற்ற ஓர் உதைபந்தாட்டப் போட்டியில் உடுவில் கோஷ்டி (3—1) கோல்களினுல் வெற்றியீட்டியது. (தே. நி.)

0 0 0

## சித்தன்கேணி வெற்றி

சித்தன்கேணி, வியாழன்

சித்தன்கேணி கலைநகர் நேருஜீ சனசமூக நிலையக் கரபந்தாட்டக் குழுவுக்கும் இளவாலை சென் அந்தனிஸ் கரபந்தாட்டக் குழுவுக்குமிடையே இளவாலையில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் சித்தன்கேணி கலைநகர் நேருஜீ சனசமூக நிலையத்தினர் இரண்டு ஆட்டங்களைப் பெற்று வெற்றியீட்டினர்.

## விமானத்தை திசைதிருப்ப முயற்சி

மூனிச், பெப் 19

மூனிச் விமான நிலையத்தில் நேற்றுக்கைதுசெய்யப்பட்ட மூன்று அரபுக்களும் இஸ்ரேலிய விமானம் ஒன்றை துப்பாக்கி முனையில் திசை திருப்பிக்கொண்டுபோக முயற்சி செய்தார்கள் என்று மேற்கு ஜெர்மன் பொலிசார் அறிவித்திருக்கிருர்கள்

# இன்றைய பலன்

மாசிமாதம் 9-ம் திகதி [20-2-70]

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- அறவழியை நாடுவீர்கள். தெய்வ சிந்தை மேலோங்கிநிற்கும். குடும்பத்தில் சுமுகமான நிலை தென்படும். புண்ணிய யாத்திரை ஒன்றை மேற்கொள்ள முற்படுவீர்கள்

**ரிஷபம்**- பொருள்வரவில் புதிய திருப்பம் ஏற்படுகின்றது. முதல்விட்டுச் செய்யும் தொழில் முன்னேற்றத்தை குறிப்பிடுகின்றது. வெளியூரில் இருந்து மகிழ்ச்சிகரமான செய்தி ஒன்றும் கிடைக்கும்.

**மிதுனம்**- சிறியவிடயத்திற்கு கூட அதிக ஆத்திரம் ஏற்படலாம். பலவழிகளிலும் பணம் செலவாகும். நண்பர் ஒருவர் உம்மை ஏமாற்றுவதற்கு முனைவார். சிலர் அவப்பெயருக்கும் இலக்காகலாம்.

**கடகம்**- பணவிவகாரத்தில் அதிக கவனம் செலுத்தவும். தொழில்துறையில் சில சிக்கல்கள் தோன்றக்கூடும். எந்தவிடயத்திலும் பொதுவாக ஒரு தடுமாற்றம் தென்படும். நாவடக்கம் மிகவும் விரும்பத்தக்கது.

**சிம்மம்**- கனிவான நினைவுகளில் மூழ்கிப்போவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி பிறக்கும். நீண்டநாள் அபிலாசை ஒன்று நிறைவேறும். உங்களுக்கு உதவ மற்றவர்கள் முன்வருவார்கள்

**கன்னி**- எதிலும் அலட்சிய மனப்பான்மை தோன்றக்கூடும் சகோதரவழியால் சஞ்சலத்திற்கு இடம் உண்டு. இனபந்துகளின் தொல்லைகள் அதிகரிப்பதற்கு இடம் உண்டு. மௌனம் உண்டு.

**துலாம்**- ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் தோன்றும். வாகனத்தின் மூலம் அதிக பொருள்வரவுக்கு இடம் உண்டு. விளைபொருள் விருத்தியும், வியாபாரமுன்னேற்றமும் ஏற்படும். நல்ல நாள்.

**விருச்சிகம்**- நீண்டநாட்களின் பின்பு இன்று நிறைவானதினம். எதிர்பார்த்த பொருள் கைவந்து சேரும். பிரம்மச்சாரிகளின் வாழ்க்கையில்மாரனின் கணைதாக்கும், சுவையான சம்பவம் இடம்பெறும்.

**தனுசு**- ஆயுதபீடைக்கு இடம் உண்டு. எனவே எதிலும் அவதானம் விரும்பத்தக்கது. அவசரப்போக்கு அனர்த்தங்களுக்கு இடம் அளிக்கலாம். தெய்வநம்பிக்கையுடன் சமயோசித புத்தியும் வேண்டும்

**மகரம்**- சந்திப்பின் மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வீர்கள். காத்திருந்த கண்களுக்கு களிப்பூட்டும் விருந்தொன்று கிடைக்கும். மகிழ்ச்சியான தினம்.

**கும்பம்**- ஏக்கத்தின் சாயல் தாக்கும். எதிர்பாராத விதமாக சிக்கல்களில் மாட்டிக்கொள்ளநேரிடும். உள்ளக்கிடக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும். நிதானம் வேண்டும்.

**மீனம்**- பூமியால் இலாபம் உண்டு புத்திரர் புகழும் சேரும். பொதுசனத் தலைமைக்கான வாய்ப்புக் கிடைக்கும். உடல் நலம் பாதிக்கப்படக்கூடும், ஆகையால் வாய்வுப் பதார்த்தங்களை நீக்கிக்கொள்ளவும்.

## அடங்காப்பிடாரி

உடுவின், வியய

யாழ் சுண்டிக்குழி நாடக கலாமன்றத்தின் 29-வது தயாரிப்பான ''அடங்காப்பிடாரி'' என்னும் நகைச்சுவை நாடகம் அச்சுவேலி காட்டுமலை கந்தசாமி கோவில் சித்திரத்தேர் திருப்பணி நிதிக்காக இம்மாதம் 20-ம் திகதி உடுவில் செபமாலைமாதா கோவிலுக்கு அருகாமையிலுள்ள அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

பாலதீவு

## அந்தோனியார் திருநாள்

யாழ்ப்பாணம், வெள்ளி

பாலதீவு அர்ச் அந்தோனியார் தேவாலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 28-ம் திகதி நடைபெறவுள்ளது. 27ம் திகதி மாலை விசேஷ ஆராதனைகளும் சுற்றுப் பிரகாரமும் நடைபெற்று 28 ம் திகதி பெரிய பாடல் பூசையுடன் உற்சவம் முடிவடையும்.

## 20 வட்டாரங்களாக பிரிக்குக

சுழிபுரம், வியா

சுழிபுரம் கிராம சபையை இருபது வட்டாரங்களாக ஒவ்வொன்றும் ஐநூறு வாக்காளர் உள்ளதாக பிரிக்குமாறு கோரும் ஓர் கோரிக்கையை சுழிபுரம்கிராமசபையினர் உள்ளூராட்சி அமைச்சர் ஆர். பிரேமதாசாவிடம் சமர்ப்பித்துள்ளனர்.

கிராம சபையின் எதிர்வரும் பொதுத் தேர்தல் புதிய வட்டாரங்களைக் கொண்டு நடைபெறவேண்டும் எனவும் அதில் கோரியுள்ளனர்.

... ...

## சிவராத்திரி விழா கொண்டாட ஏற்பாடு

பருத்தித்துறை, வியா

கரவை வல்லுவர் மன்றம் எதிர்வரும் மகாசிவராத்திரி விழாவை வெகு விமரிசையாக நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

வதிரி உல்லியனொல்லை அம்மன் கோவிலில் நடக்விருக்கும் நிகழ்ச்சிகளில் ''எட்டி உலக்கையை'' ''வாழ்வாசாவா'', 'காவலன் கருங்கோன்'' என்ற நாடகங்களும் மேடையேற்றப்படவுள்ளன.


இன்று முதல்
உங்களை மகிழ்விக்க பவனி வருகிறார்கள்
எம். ஜி. ஆர் ஜெயலலிதா
காதல் வாகனம்
வின்ஸரில்
தினசரி 4 காட்சிகள்

ராஜா (யாழ்ப்பாணம்) (தினசரி 2காட்சிகள்)
ரவிச்சந்திரன் - ராஜஸ்ரீ நடித்த
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
டில்லி மாப்பிள்ளை

ராணி (யாழ்ப்பாணம்) (தினசரி 3 காட்சிகள்)
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு நடித்த
அடிமைப் பெண்

கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
தமிழ்நாட்டில் மக்கள் மத்தியில் புதிய சாதனையை ஏற்படுத்திய மாபெரும் வண்ணத்திரை ஓவியம்.
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனுதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்று
''பேசும்படத்தின்'' மூன்று விருதுகள் பெற்ற
வெற்றிச்சித்திரம்
(1) சிறந்த படம் (2) சிறந்த நடிகர் (சிவாஜி)
(3) சிறந்த உபநடிகர் (பாலையா)
நாதஸ்வர இசை:
மதுரை சேதுராமன் - பொன்னுச்சாமி சகோதரர்கள்
சிவாஜிகணேசன் பத்மினி
பாலையா
நாகேஷ்
நம்பியார்
ஏ.வி.எம். ராஜன்
மனோரமா
மற்றும்பலர் நடித்த
சிவாஜிகணேசன் அளிக்கும்






ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்
தில்லானு மோகனாம்பாள்
ஈஸ்ட்மென் கலர்
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
A. P. நாகராஜன்



உங்கள் அன்பிற்குரியவர்களுக்கு நீங்கள் செலுத்தும் பரிபூரண அஞ்சலி
ஏ. எப். ரேமண்டஸ்
ஈமக் கிரியை ஏற்பாடுகள்
புகழ் வாய்ந்த, மரியாதையான, பாதுகாப்பான ஈமக் கிரியைச் சேவை இப்பொழுது யாழ்ப்பாணத்தில் கிடைக்கிறது.
147, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
...ந்தியிலிருந்து 50 யார் தூரம்)
...கிடைக்கும் சேவை.
...ப் பெட்டிகள்.
...பாதுகாத்தல்
...யைச் சுயமாக
0231

# இஸ்ரேலிய விமானப்படை மும்மடங்கு உயர்ந்ததாம்

## அதிபர் நாஸரே ஒப்புக்கொள்கிருர்

### வெளியேறும் திகதியை அறிவித்தால்

### போர்நிறுத்தத்துக்கு சம்மதம் என்கிருர்

கெய்ரோ, பெப். 1

**இஸ்ரேலியரின் விமானப்படை ஐக்கிய அரபுக் குடியரசு விமானப் படையைவிட பலம் வாய்ந்தது. இஸ்ரேலிடம் திறமை மிக்க விமானிகள் ஏராளமாக விருக்கிருர்கள்.**

ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் அப்துல் நாஸரே இதை ஒப்புக்கொண்டிருக்கிருர்.

பாரிஸ் பத்திரிகையொன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் அதிபர் நாஸர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டிருக்கிருர்,

இஸ்ரேலிய விமானப் படை ஐக்கிய அரபுக் குடியரசு விமானப் படைகளை விட மும்மடங்கு உயர்வாக விருக்கின்றது. இதனுல் எமது விமானப் படையினர் எனது கட்டளையின்பேரில் கூடியவரை அவர்களுடன் மோதுவதைத் தவிர்த்துவருகிருர்கள் என்று அதிபர் நாஸர் கூறியிருக்கிருர்.

**திகதியை அறிவிக்கட்டும்**

இஸ்ரேலியருடன் போர் நிறுத்தம் ஏற்படுவதையும் அவர் வரவேற்ருர்.

போர் நிறுத்தத்தை வரவேற்கின்றேன். ஆனுல் முதலில் இஸ்ரேலியர் தாம்கைப் பற்றியுள்ள இடங்களிலிருந்து வெளியேறுவதற்கான திகதியை அறிவிக்கட்டும் என்று நிபந்தனை தெரிவித்திருக்கிருர் நாஸர்,

**ஜெனிவாவில் யுதாண்ட்**

ஐ நா. தலைமைச் செயலாளர் யுதாண்ட் நேற்று டாக்டர் குஞர் ஜாரிங்குடன் இரண்டுமணி நேரம் ஆலோசனைகள் நடத்தினர். மேற்காஸியாவில் மீண்டும் அமைதிப்பணியில் ஈடுபடும்படி டாக்டர் குஞர் ஜாரிங்கை யுதாண்ட் கேட்டுக்கொள்வார் என்று தெரிகின்றது. நேற்றைய சந்திப்புப்பற்றி அறிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை. ஆனுல் மேற்காசியாவில் அமைதியேற்படுத்தும்மார்க்கங்கள் பற்றியே இவர்கள் ஆலோசித்திருக்க வேண்டும் என்று அவதானிகள் கூறினுர்கள். இன்று மீண்டும் யுதாண்ட் டாக்டர் ஜாரிங்குடன் ஆலோசனைகள் நடத்தவிருக்கிருர்

டாக்டர் குஞர் ஜாரிங் மீண்டும் மேற்காசியாவுக்கு வந்து அமைதிப் பணிகளில் ஈடுபடுவதை இஸ்ரேலியர் வரவேற்பார்களென்றுதெரிகின்றது. ஆனுல் ஐ. நா. அமைதிப்படை மீண்டும் மேற்காஸிய போர் நிறுத்த எல்லைகளுக்கு வருவதை இஸ்ரேலியர் விரும்பமாட்டார்களென்று டெல்அவிவ் செய்திகள் கூறுகின்றன.

# போப்பாண்டவர் ஓய்வு பெறுவார்?

வத்திக்கான் பெப். 19

போப்பாண்டவர் தம் பதவியிலிருந்து ஓய்வு எடுத்துக் கொள்வது பற்றி ஆலோசித்து வருவதாக வத்திக்கானில் ஹேஷ்யங்கள் அடிபடுகின்றன.

கத்தோலிக்க திருச்சபை அமைப்பில் மாறுதல்கள் செய்யும் யோசனையை போப்பாண்டவர் போல் எதிர்ப்பதால் அவர் பதவியிலிருந்து விலகிக்கொள்ள திட்டமிட்டிருப்பதாக வெளியான பிரிட்டிஷ் பத்திரிகைச் செய்தி யொன்றைக் குறிப்பிட்டு வத்திக்கான்வட்டாரங்கள் இம்மாதிரி நடக்கக்கூடுமென்பதை ஒதுக்குவதற்கில்லை என்று கூறின.

வத்திக்கான் அதிகாரிஒருவர் இதைத் தடுக்கக்கூடிய ஷரத்துகள் எதுவும் திருச்சபைச் சட்டத்தில் இல்லை என்று கூறினுர். போப்பாண்டவர் விலகுவாரென்ற ஹேஷ்யத்தை வெளியிட்ட 'சண்டேடைம்ஸ்' அவருக்கு இப்போது 72 வயது என்றும் 75-வது வயதில் விலகுவாரென்றும் கூறியது.

# தூத்துக்குடி துறைமுகம் 73-ல் பூர்த்தியாகும்

புதுடில்லி, பெப். 19

தூத்துக்குடித் துறைமுக அபிவிருத்தி வேலைகள் 1972-73ம் ஆண்டில் பூர்த்தியாகிவிடுமென்று இப்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளது

சென்னைத் துறைமுகத்தில் கட்டப்பட்டுவரும் புதிய துறைமுக வேலைகள் இந்த ஆண்டிலேயே முடிவடையவிருக்கின்றன.

இந்தியாவில் உள்ள 8 பெரிய துறைமுகங்களை நன்கு விரிவுபடுத்தி நவீனமயமாக்கும் திட்டம் அமுலாகிக்கொண்டிருக்கிறது.

இவைகளைத் தவிர, தூத்துக்குடி, மங்களூர் ஆகிய இரண்டு நடுத்தரத் துறைமுகங்களும் பெரிய துறைமுகங்களாக அபிவிருத்தி செய்யப்படும்.

கல்கத்தா, பம்பாய், சென்னை, விசாகப்பட்டினம் ஆகிய துறைமுகங்களுக்கு உதவியாக அவைகளின் பக்கத்திலேயே சிறு துறைமுகங்கள் அமைக்கப்படும். இவை பிரதான துறைமுகத்தின் பாரத்தைக் குறைக்கும்

சென்னையில் பெரிய கப்பல்களை நிறுத்தி, சரக்குகளை இறக்குவதற்கு வசதியாக ஏற்கனவே உள்ள துறைமுகத்தின் வெளியே ஒரு துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டுவருகிறது. சென்னை எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைக்கு வேண்டிய குருட் எண்ணையை இறக்குமதி செய்வதற்கும், சென்னையிலிருந்து இரும்புத் தாது ஏற்றுமதி செய்வதற்கும் இத்துறைமுகம் வசதியாக இருக்கும் இத்துறைமுக அமைப்பு வேலைகள் இந்த வருஷத்தில் முடிந்துவிடும்.

தூத்துக்குடி - மங்களூர்த் துறைமுகங்களைப் பெரிய துறைமுகங்களாக விரிவுபடுத்தும் வேலையில் முதற் கட்டம் 1972-73ல் முடிவடைந்துவிடும்.

# உலக விவகாரங்களில் அமெரிக்காவின் பங்கு

## அதிபர் நிக்ஸன் விளக்கம்

நியுயோர்க். பெப் 19

இதரநாடுகளுக்கு அமெரிக்கா அளித்துள்ளனவாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம் ஆனுல் அங்குமிங்கும் சில மாறுதல்கள் மட்டும்செய்யப்படும் என்று ...

வளரும் நாடுகளுக்கு உதவுவதில் அமெரிக்கா தொடர்ந்து ஆர்வம் காட்டுமென்றும், ஆசிய நாடுகள் சமபலத்துடன் இருப்பதை அமெரிக்கா விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

...

## 11வயது தாய்க்கு இரட்டைக் குழந்தை

கலை, கல்வி, விஞ்ஞானம்

# வெளிநாட்டு மாணவருக்கு அமெரிக்க அரசு மரியாதை

வாஷிங்டன், பெப். 16

இந்தியா, இலங்கை உள்பட 80 நாடுகளைச் சேர்ந்த 400 மாணவர்களை அமெரிக்க அரசின் வெளிஉறவுத் துறை அண்மையில் கௌரவித்தது. அன்று வெளிநாட்டு மாணவர் தினம் கொண்டாடப்பட்டது.

வெளிநாட்டு மாணவர்களுக்கும், அமெரிக்க மாணவர்களுக்கும், வெளிநாட்டு மாணவர் பணிச் சங்கத்தின் நண்பர்களுக்கும் வெளியுறவுத்துறை நடத்திய பதினைந்தாவது ஆண்டு வரவேற்பில் அழைப்பின் பேரில் 22 அமெரிக்கக் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் படிக்கும் வெளிநாட்டவர்கள் கலந்துகொண்டார்கள்.

சங்கத்தின் தலைவர் அமெரிக்கத் தலைமை நீதிமன்ற நீதிபதி பாட்டர் ஸ்டீவர்ட்.

வெளிநாட்டு மாணவர் தினம் வழக்கமாக டிசம்பர் மாதம் கொண்டாடப்பெறும். இந்த ஆண்டு பெப்ரவரிவரை அது ஒத்திப்போடப்பட்டது. ஐ. நா உலகக் கல்வி ஆண்டை அமெரிக்காவில் கொண்டாடும்போது இந்த நாளையும் சேர்த்து நடத்துவதற்காகவே ஒத்திப்போட்டார்கள்.

**தமிழர் கருத்து**

விருந்தாளிகளில் ஒருவர் ஐஸக் ஆரோக்கியசாமி. இவர் புதுச்சேரியைச் சேர்ந்தவர் பலநாட்டுக் கல்விப் பரிமாற்றத் திட்டத்தின் உண்மையான பலன் அதன் இரு திசைத்தன்மை கொடுத்து வாங்குதல்தான் என்று தாம் கருதுவதாக ஆரோக்கியசாமி கூறினுர்.

கத்தோலிக்கப் பல்கலைக் கழகத்தில் சமுதாய இயலில் டாக்டர் பட்டம் பெறுவதற்காக இவர் படித்துவருகிருர்.

வாஷிங்டன் நகரிலுள்ள ஸ்டிரேயர் கல்லூரியில் படிக்கும் மகேந்திரஷா (பம்பாய்) 'அமெரிக்க மக்களின் மாபெரும் வேகம் என்னைக் கவர்ந்துள்ளது. பத்திரிகைகள், டெலிவிஷன் முதலியவற்றின் வழியாக உடனுக்குடன் இந்நாடு அறிவைப் பரப்பிவருகிறது'' என்ருர்.

இவரது சகோதரரான ஹேமந்த்ஷா, உபகாரச் சம்பளம்பெற்று விஸ்கான்ஸின் பல்கலைக் கழகத்தில் ஆலைப் பொறியியல் படித்துவருகி...

வாஷிங்டன் பகுதியில் வாழும் அல்லது அங்கு வருகைதரும் 7000 வெளிநாட்டு மாணவர்களுக்கு மேல் வெளிநாட்டு மாணவர் பணிச் சங்கத்தினுல் பயனடைந்து வருகின்றனர். அமெரிக்க குடும்பங்களில் இம்மாணவர்கள் விருந்தாளிகளாகத் தங்கவகைசெய்தல், கருத்தரங்குகள் நடத்துதல், மக்களோடு மக்கள் நேரடியாகப்பழக வாய்ப்பளித்தல், தொழில் நாட்டத்திட்டங்கள் நடத்துதல் ஆகியவற்றின் மூலம் அமெரிக்கப்பண்பாடு, கல்விச்சூழலில் இவர்கள் பங்குகொள்ளச் சங்கம் வகைசெய்கிறது.

ஜார்ஜ் டவுன் பல்கலைக் கழகத்தில்படிக்கும்இலங்கை மாணவர் சுப்பிரமணியம் சச்சிதானந்தம் என்பவரும் வரவேற்பில் கலந்துகொண்டார்

### மண்டல சார்பற்ற நாடுகளின்

# உச்சி மாநாடு டிட்டோ யோசனை

நைரோபி, பெப். 19

மண்டலசார்பற்ற நாடுகளின் உச்சிமாநாடொன்றை விரைவில் கூட்டவேண்டும் என்று யூகோஸ்லாவிய அதிபர் டிட்டோ யோசனை தெரிவித்திருக்கிருர்.

கென்யாவில் நேற்றிரவு அதிபர் கென்யாட்டாவைக் கௌரவிப்பதற்காக நடைபெற்ற விருந்தின்போது அதிபர் டிட்டோ தலைமைவகித்து உரை நிகழ்த்தினுர்.

ஐ நா. சபையின் அடுத்த கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் மண்டலசார்பற்ற நாடுகளின் உச்சிமாநாடொன்றை நடத்தவேண்டும் என்று மார்ஷல் டிட்டோ யோசனை தெரிவித்திருக்கிருர்.

# லண்டனில் சர்வதேச பத்திரிகையாளர் நிலையம்

லண்டன், பெப் 19

சர்வதேசப் பத்திரிகையாளர் நிலையம் ஒன்று அண்மையில் லண்டனிலுள்ள பத்திரிகைத்துறைக்கு பிரபல்யம் பெற்ற பிளீட் வீதியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இன்னும் மூன்று வருட காலத்தில் இந்நிலையம்பிரமாண்டமான ஒரு கட்டிடமாக எழுப்பப்பட்டு உலக பத்திரிகையாளர்களின் ஒரு கேந்திரஸ்தானமாக விளங்கும்.

5,500,000 பவுண்கள் செலவில் இந்த நிலையம் நிர்மாணிக்கப்படும், பிரிட்டனின் பிரபல்ய காப்புறுதி நிறுவனமான நோர்விச்காப்புறுதி ஸ்தாபனம் இதற்கு நிதியுதவி அளிக்கும். லண்டன் வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சங்கம் செய்திப் பத்திரிகை சங்கம், லண்டன் பத்திரிகையாளர் சங்கம் ஆகியனவற்றின் ஆதரவின் கீழேயே இந்நிலையம் நிறுவப்படுகிறது. 238 அடி உயரமான கோபுரமாடிகளைக் கொண்டதாக எழுப்பப்படவிருக்கும் இக்கட்டிடம் பத்திரிகை ஸ்தாபனங்களுக்கும் பத்திரிகையாளருக்கும் காரியாலய இடவசதியை அளிக்கும். அத்துடன் தந்திப் போக்குவரத்து வசதிகள் டெலிவிஷன் இணைப்புகள், ஒலிப்பதிவு ஸ்ரூடியோக்கள் ஆதியனவும் இங்கு இடம் பெறும்.

மின்கணித இயந்திரங்களால் இயங்கக்கூடிய பத்திரிகை வாசிகசாலை சேவை ஒன்றும் இங்கு ஆரம்பிக்கப்படும். அது மட்டுமன்றி போசனசாலை, மகாநாட்டு மண்டபங்கள், மற்றும்வங்கி பிரயாண சேவைகளும் இங்கு இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதரநாடுகளுக்கு அமெரிக்கா அளித்துள்ளவாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம் ஆனால் அங்குமிங்கும் சில மாறுதல்கள் மட்டும்செய்யப்படும் என்று அதிபச் நிக்ஸன் தெரிவித்திருக்கிறார்.

உலகவிவகாரங்களைப்பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ளும் புதிய சகாப்தம் ஒன்று உருவாவதைப் பார்க்கத்தாம் விரும்புவதாகதிரு. நிக்ஸன்குறிப்பிட்டார்.

அமெரிக்க ஆட்சிமன்றமான காங்கிரஸ் சபைக்கு விடுத்த ஓர் கொள்கைஅறிக்கையில் அதிபர் நிக்ஸன் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்:

எந்தெந்த விஷயங்களில் சாத்தியமோ அதில் எல்லாம் சோவியத் யூனியனுடன் உடன்படிக்கைகள் செய்து கொள்ள அமெரிக்காவிரும்புகிறது என்றார் திரு. நிக்ஸன்.

வுவதில் அமெரிக்கா தொடர்ந்து ஆர்வம் காட்டும்என்றும், ஆசிய நாடுகள் சமபலத்துடன் இருப்பதை அமெரிக்கா விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சீனவுடன் உறவுகளை வளர்த்துக் கொள்ள சாத்தியமானஎல்லா நடவடிக்கைகளும்எடுக்கப்படும் என்றும் வார்ஸோவில் இருநாடுகளுக்குமிடையில் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைகளில் சீனச்சோவியத் எல்லைப் பிரச்னையைத் தமக்கு சாதகமாக்கிக் கொள்ளமுயற்சி எடுக்கப்படமாட்டாது என்றும் அதிபர் தெரிவித்தார். இந்த விஷயத்தில் அமெரிக்கா நடுநிலைமை வகிக்கும் என்றார் அவர்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் உள்ள பிரச்னைகள் பற்றி குறிப்பிட்டு இந்த இருநாடுகளும் உலக அமைதிக்கு பெருமளவில் உதவ முடியும் என்றார் அதிபர்.

## "தேசிய இளைஞர்சேவை பிற உத்தியோகங்கள் பெறஉதவும்"

— அரசாங்க அதிபர்

எழுதுமட்டுவாள், வியா

"கிராமங்கள் தோறும் அபிவிருத்தி வேலைகள் மலிந்துகிடக்க இளைஞர்கள் அதில் ஈடுபடாது அரசாங்க உத்தியோகங்களை எதிர்பார்த்துக்கொண்டு வாழாவிருக்கின்றார்கள். இதனால் வேலையில்லாப் பிரச்னை மேலும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாகவே அரசாங்கம் தேசிய இளைஞர் படையைத் திரட்டி இளைஞர்க்கும் நாட்டுக்கும் உதவ முன்வந்துள்ளது. இதை வரவேற்று சேவைசெய்வீர்களானல் நீங்கள் நாட்டின் வருங்காலச் செல்வர்களாவீர்கள்".

சமீபத்தில் வரணியில் நடைபெற்ற தேசிய இளைஞர் படை திரட்டும் விழாவில் அவ்விழாவை ஆரம்பித்துவைத்தயாழ் மாவட்ட அரசாங்க அதிபர் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில் இச்சேவையில் சேர்ந்த இளைஞர்கள் ஒவ்வொருவரும்தான் அரசாங்க உத்தியோகத்தர் என்பதை மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். பிற உத்தியோகங்களைப் பெறவும் இச்சேவை உதவும். இவ்வியக்கம் சிறந்த முறையில்இயங்கினல் கிராம அபிவிருத்தி வேலைகளுக்கு அரசாங்க இலாகாக்களை எதிர்பார்த்திருக்கவேண்டியதில்லை எனக் குறிப்பிட்டார்.

## வானொலியில் திருவள்ளுவர் தினம்

யாழ்ப்பாணம், வெள்ளி

திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு இம்மாதம் 23-ம் திகதி பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் இலங்கை வானொலியில் இரவு 7-45 மணிக்கு 'வள்ளுவன் வகுத்த அறநெறி' என்ற பொருளில் பேசுவார். (மல், நிரு.(

— —

## ரூ. 75 அபராதம்

வல்வெட்டித்துறை, வியா

வல்வெட்டித்துறை சமரபாகுவைச்சேர்ந்த த. சின்னப்பிள்ளை என்பவர் கடந்த வருடம் ஆவணிமாதம் 21ம் திகதி அதே இடத்தைச் சேர்ந்த வேலன் கணபதி என்பவருக்கு கம்பியாலும் கொட்டனலும் அடித்துக் காயம் உண்டுபண்ணியதாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்டது. விசாரணையின்பின்னர் மாஜிஸ்திரேட் எதிரியான சின்னப்பிள்ளையைக் குற்றவாளியாகக்கண்டு ரூபா 75 அபராதம் விதித்தார்.

## 11வயது தாய்க்கு இரட்டைக் குழந்தை

மாட்ரிட் (ஸ்பெயின்) பெப், 19

11 வயதுடைய பெண் இரட்டைக் குழந்தைக்கு தாயாகியிருக்கிறார். தெற்கு ஸ்பெயினில் மூர்ஸியா மாகாணத்தில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரட்டைக் குழந்தைகளில் பெண் இறந்துவிட்டது. ஆண் குழந்தையும் தாயும் சுகமாக இருக்கின்றனர்.

## இயற்கை ரப்பர் உற்பத்தியாளர்

லண்டன், பெப். 19

இவ்வருடம் ஏப்ரல் மாதம் 9ந் திகதி முதல் இரு நாட்களுக்குத் தொடர்ந்து லண்டன் இம்பீரியல் கல்லூரியில் இயற்கை ரப்பர் உற்பத்தியாளர் ஆராய்ச்சிச் சபையின் மாநாடொன்று நடைபெறவிருக்கிறது. போக்குவரத்துப் பொறியியல் துறையில் பாவிக்கப்படும் ரப்பர் பாகங்கள், துணைப் பொறிச் சாதனங்களின் அமைப்பும், அவற்றின் திறமையும் பற்றிய விவாதங்கள் இம்மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் பிரதான அம்சமாக இருக்கும்.

.........

## நோக்கு விழா

மல்லாகம், வியா

"தமிழ்நாடு" வெளியீடு நோக்கு விழா இம்மாதம் 20ம் திகதி மாலை ஆசிரியர் திரு. காசி சிவயோகநாதன் தலைமையில் வசாவிளான் சத்திக்கருகில் நடைபெறவிருக்கின்றதுகோப்பாய்எம்பி. திரு. கதிரவேற்பிள்ளை பிரதமவிருந்தினராககலந்து கொள்வார் கவிஞர் வீ. கந்தவனம், வழக்கறிஞர் வ. இராசநாயகம் ஆகியோரும் விழா செற்பொழிவு நிகழ்த்துவர் இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

—

## 'கைமுனுவின் காதலி' நூல்வெளியீடு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மலாயா கபே மேல்மாடியில் இன்று வெள்ளிக்கிழமை மாலை திரு மு. கனகராஜன் எழுதிய 'கைமுனுவின் காதலி' என்ற நாடக நூலின் வெளியீட்டுவிழா நடைபெறவிருக்கிறது.

உதவியாக அவைகளின் பக்கத்திலேயே சிறு துறை கட்டம் 1972-73ல் முடிவடைந்துவிடும்.

கலை, கல்வி, விஞ்ஞானம்

# யு. எஸ். - ரஷ்யா புதிய ஒப்பந்தம்

வாஷிங்டன், பெப். 19

காற்றும் நீரும் கெடுவது பற்றிய பிரச்னைகள் குறித்துத் தகவல்களையும் அனுபவங்களையும் பரிமாறிக் கொள்ள அமெரிக்காவும் ரஷ்யாவும் இசைந்துள்ளன

1970-71 ஆண்டுகளுக்கு விஞ்ஞான, தொழில்நுட்ப, கல்வி பண்பாடு முதலிய துறைகளில் பரிமாற்றங்கள் செய்து கொள்வது குறித்து இரு நாடுகளும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டதும் இந்தச் செய்தி வெளியானது.

ஈராண்டுப் பரிமாற்றங்களுக்கான ஏழாவது ஒப்பந்தம் இது. 'மனிதனும் அவனது சூழ்நிலையும்' என்ற ஒரு புதிய பிரிவு இதில் இடம் பெற்றுள்ளது. காற்று, நீர் கெடும் துறைகள் பற்றிய பரிமாற்றங்களோடு கூட, நகர்ப்புறப் போக்குவரத்து, கடல் ஆராய்ச்சி, வேளாண்மைப் பொருளாதாரம் ஆகிய துறைகளிலும் அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்வதற்கும் இது வகை செய்கிறது.

இயற்கை விஞ்ஞானம், தொழில்நுட்ப விஞ்ஞானம், பண்பியல் கலைகள், சமுதாய இயல் ஆகிய துறைகளில் பேராசிரியர்களையும் ஆசிரிகளையும் பரிமாறிக் கொள்வதற்கும் முதல் தடவையாகப் புதிய ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டுள்ளது

அயல் மொழிகள் கற்பிக்கும் முறைபற்றி ஆய்ந்தறிய மூன்று வல்லுநர்களை அமெரிக்காவுக்கு அனுப்ப ரஷ்யா முடிவுசெய்துள்ளதும் முதல் தடவையாகும்.

பரிமாற்ற ஒப்பந்தத்தின் படி, அரும் பொருள் களஞ்சியங்களிலிருந்து காட்சிப் பொருட்களைப் பரிமாறிக் கொள்ளவும் இருநாடுகளும் திட்டமிட்டுள்ளன.

ஆராய்ச்சி மாணவர்கள் பரிமாற்றம் பற்றியதொகை 40ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பழைய ஒப்பந்தத்தில் 30 மாணவர்கள் பரிமாற்றத்துக்கே வகை செய்யப்பட்டிருந்தது.

இரு தரப்பிலும் புகழ்பெற்ற மேடைக் கலைக் குழுக்கள் பரிமாற்றத்தை அதிகப்படுத்தவும் இரு நாடுகளும் முடிவு செய்துள்ளன. பழைய ஒப்பந்தத்தில் இரு தரப்பிலும் மூன்றுகுழுக்கள் வந்து போகவே வகை செய்யப்பட்டிருந்தது; புதிய ஒப்பந்தப்படி அடுத்த இருஆண்டுக் காலத்தில் இருதரப்பினரும் ஐந்து குழுக்களைப் பரிமாறிக் கொள்வர்.

— —

## தமிழருக்கு சோதனையான காலமாம்

உடுப்பிட்டி, வியா

"கடந்த 23 வருட காலத்தில் நடைபெறும் ஏழாவது ஆட்சிமன்றப் பொதுத்தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் இடதுசாரிகளாகிய நாம் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும். அண்மையில் நடைபெறவிருக்கும் ஆட்சிமன்றத் தேர்தல் தமிழ் மக்களுக்கு ஒரு பெரும் சோதனைக்காலமாகும்"

இவ்வாறு வடபிரதேச சமசமாஜ வாலிப முன்னணித் தலைவர் டாக்டர் திரு. எஸ். எஸ். மாசிலாமணி கரவெட்டி முற்போக்கு முன்னணிக், கழகத்தில் நடைபெற்ற அரசியல் வகுப்பில் இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலும், இடதுசாரிகளும் என்னும் தலைப்பில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இலவச அரிசிப்பங்கீடு நாட்டு மக்களுக்கு மிகுந்த கஷ்டத்தை உண்டாக்கிவிட்டது' இலவச அரிசிவிநியோகத்தை நிறுத்திவிட்டு ஒரு கூப்பனுக்கு ஒன்றரை ரூபா பணமாக வழங்க அரசாங்கம் ஆலோசித்துவருகின்றது. இத்திட்டம் அமுலுக்கு வருமானல் மக்கள் மேலும் கஷ்டமும் நஷ்டமும் அடைவர்.

திரு. வீ. செல்வராஜா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. செயலாளர் திரு. என் சிவராசா நன்றி கூறினர்:

— —

## தொலைபேசி நிலையம்

சுழிபுரம், வியாழன்

பண்டத்தரிப்பில் தன்னியக்க தொலிபேசி பரிவர்த்தனை நிலையம் அமைக்கும் வேலைகள் யாவும் பூர்த்தியாகிவிட்டன. விரைவில் இது செயல்படவிருக்கிறது.

குடன் இந்நாடு அறிவைப் பரப்பிவருகிறது" என்றார்.

இவரது சகோதரரான ஹேமந்த்ஷா, உபகாரச் சம்பளம்பெற்று விஸ்கான்ஸின் பல்கலைக் கழகத்தில் ஆலைப் பொறியியல் படித்துவருகிறார்.

## மேற்கு ஜெர்மனி பயணமானர்

புலோலி, வியாழன்

குடத்தனையைச் சேர்ந்த செல்வன் ஜே. பி. ஜெயசுந்தரம் காகிதத் தொழில் நுட்பத்துறையில் 3 வருடப் பயிற்சிபெறுவதற்காக விமான மூலம் மேற்கு ஜெர்மனிக்குப் பயணமானர்.

வாழைச்சேனைக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்தில் பொறியியல் பகுதியில் கடமையாற்றிய திரு. ஜெயசுந்தரம் அரசினரின் உபகாரச் சம்பளம்பெற்று அங்குசென்றுள்ளார். ஹாட்லிக்கல்லூரி அம்பாறை ஹாடி தொழில் நுட்பக்கல்லூரி ஆகியவற்றின் பழையமாணவரான இவர் குடத்தனையைச் சேர்ந்த ஒய்வுபெற்ற தலைமை ஆசிரியர் திரு. ஏ வி. பொன்னு, நாகர் கோவில் தலைமைஆசிரியை திருமதி லில்லி பொன்னு ஆகியோரின் இளையபுதல்வராவர்.

— —

## 4 மாதமாக கப்பலில் தடுப்புக்காவல்

கோட்டை, வியா

கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ள 'மின்ன' என்னும் கிரேக்கக் கப்பலில் கென்யா நாட்டைச் சேர்ந்த சட்டவிரோதப் பிரயாணி ஒருவரை இலங்கைத் துறைமுகப் பொலிஸார் கடந்த நாலுமாத காலமாக காவலில் வைத்துள்ளனர்.

ஜோனி என்னும் இந்த நபர் தென் ஆபிக்காவில் உள்ள மொஸாம்பிக் துறைமுகத்தில் இந்தக்கப்பல் நின்றபோது, அதற்குள் ஏறி மறைந்திருந்தாராம். கப்பல் மொஸாம்பிக் துறைமுகத்தை விட்டு புறப்பட்ட பின்புதான் இவ்விடயம் கப்பல் தலைவனுக்குத் தெரியவந்ததாம்.

இந்தக்கப்பல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தவுடன் இந்த சட்டவிரோதப் பிரயாணி பற்றி இலங்கைத் துறைமுகப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்து. அதை அடுத்து துறைமுகப்பொலிசார் இந்தப் பிரயாணியை கப்பலுக்கு வெளியேசெல்ல விடாமல் பாதுகாத்துவருகின்றனர்.

நிறுவனமான நோர்விச்காப் புறுதி ஸ்தாபனம் இதற்கு நிதியுதவி அளிக்கும். லண்டன் வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சங்கம் செய்திப் பத்திரிகை சங்கம், லண்டன் பத்திரிகையாளர் சங்கம் ஒன்றும் இங்கு ஆரம்பிக்கப்படும். அதுமட்டுமன்றி போசனசாலை, மகாநாட்டு மண்டபங்கள், மற்றும்வங்கி பிரயாண சேவைகளும் இங்கு இடம்பெறும்.

## "குடியரசு நாடாகிவிட்டால் இங்கு பிரச்னைகளிராது"

-- வி. பொன்னம்பலம்

மாவிட்டபுரம், வியாழன்

"இந்தியா போன்று இலங்கையை ஒரு குடியரசு நாடாக்கவேண்டும். மனித உரிமைகளை மதித்து அனைவரையும் வாழவைக்கக் கூடிய அரசியல் அமைப்பு ஒன்று இன்றுள்ள சோல்பரி அமைப்புக்குப் பதிலாக வரையப்படவேண்டும். அப்போது எந்த வகையான கொடுமைகளையும் ஒழிக்கச் சட்டப் பாதுகாபபுக்கள் அமையத் தொடங்கும். மொழிப் பிரச்னைகளின்றி அவை பாகுபாடின்றி மதிக்கப்படும்.

இன்று நாட்டில் நிலவிவரும் பரஸ்பர அவநம்பிக்கைகளும், சந்தேகங்களும் ஒழிக்கப்பட வேண்டுமானல் உத்தியோக மொழிச் சட்டத்தையும், தமிழ் மொழி விசேஷ ஷரத்துக்களையும் எந்த வகையான பாகுபாடுமின்றி அமுல்நடத்தவேண்டும்."

இவ்வாறு அளவெட்டி முற்போக்கு வாலிபர் சனசமூகநிலைய ஆதரவில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய திரு. வி. பொன்னம்பலம் கூறினர்.

"பெரும்பான்மை இனத்திற்குச் சார்பாகவோ அல்லது சலுகை காட்டும்வகையிலோ அரசியல்வாதிகளின் கொள்கை அமையுமானல் அது ஆபத்தானது. பரஸ்பர அவநம்பிக்கைக்கு இதுவே வழிகோலுகிறது. இனங்கள் மத்தியில் நம்பிக்கை பிறக்க சாதிகளின் மத்தியில் சமத்துவம் நிலவ, மனிதனை மனிதனுக மதிக்கும் உரிமைச் சாசனம் இங்கு அமைவது அவசியம்" என அவர் மேலும் சொன்னர்.

மற்றும் பலர் உரையாற்றினர். தி. மு. சின்ன... தம்பி கூட்டத்திற்கு தலைமைவகித்தார்.

— —

## மணல் களவு

சுழிபுரம், வியாழ...

திருவடிநிலை கடற்கரைக்கு அருகாமையிலுள்ள இடங்களில் மணல் பெருந்தொகையாக வண்டிகளில் ஏற்றப்படுகிறதாம். இதனல் கடல்நீர் ஊர்மனைக்குள் வந்துவிடுமோ என இப்பகுதி மக்கள் அஞ்சுகின்றனர்.

## இளைஞர்கள் மயக்கநிலை தெளியவேண்டு...

முசலி, வியாழன்

"பிறநாடுகளுக்கு நெல்லை ஏற்றி பெருமளவில் வாணிபம்செய்த மாந்தை. மாதோட்டப் பகுதிகள் இன்று வெளிநாடுகளிலிருந்து நெல்லை வருவித்து உண்ணவேண்டிய நிலையில் உள்ளன. எமது இளைஞர்கள் பரந்துகிடக்கும் காணிகளில் விவசாயத்தைச் செய்வதை விடுத்து உத்தியோக மாயையில் மயங்கிக் கிடப்பதே இதற்குக் காரணம்.

இந்த மயக்கநிலை மாறி எமது மன்னார் மாவட்டத்தில் வாழும் இளைஞர்கள் எமது நாடு பொருளாதாரப் பாதையில் முன்னேற விவசாயத்தில் இறங்கவேண்டும்"

மன்னார் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வீ. ஏ. அழகக்கோன் மாந்தைக் காரியாதிகாரி பிரிவில் நெடுங்கண்டல் கறுக்காக்குளம் சிரமதான ஆரம்ப விழாவின்போது மேற்கண்டவாறு கூறின... கூட்டத்திற்கு மாந்... காரியாதிகாரி திரு. மு... பிரமணியம் தலைமை... தார். மாந்தை... கிராமசபைத் த... ம. சவிரி ... படுத்தியி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தானும் நூல் நூற்று ஏழைகளுக்கு வழிகாட்டி அவர்களையும் நூல் நூற்கச் செய்கிறவன் தெய்வத்திற்குப் பணிசெய்கிறவனாவான்.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "ELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 9-ந் திகதி (20-2-70)


## பல்கலைக்கழக கமிஷன் விசாரணை

வடக்கு மாகாணத்திலா, கிழக்கு மாகாணத்திலா புதியதொரு பல்கலைக்கழகம் அமைக்கவேண்டுமென்பது பற்றி ஆராய்ந்து கல்வி அமைச்சருக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக தேசிய உயர்கல்விச் சபைத் தலைவர் டாக்டர் ஜி பி. மலலசேகரா தலைமையில் நியமிக்கப்பட்ட மூவர் கமிஷன் யாழ்ப்பாணத்துக்கு வந்து விசாரணைசெய்து, இப்பகுதியில் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு வாய்ப்பான இடங்களையும் பார்வையிட்டுத் திரும்பியிருக்கிறது. இந்த விசாரணைக்கமிஷன் தனது விசாரணைகளை விரைவில் நிறைவேற்றிக் கொண்டு தனது அறிக்கையையும் காலம் தாழ்த்தாமல் கையளிக்குமென்று எதிர்பார்ப்போம்.

வடக்கு மாகாணத்தில் தகுதிவாய்ந்த பல்கலைக்கழகம் அமைப்பதற்கு போதிய இடவசதியில்லையென்றும், நல்ல தண்ணீர் இல்லையென்றும் சிலகாலத்துக்குள் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படுமென்றும் பலரும் கூறிய காரணங்களை இங்கு நடத்திய விசாரணையினின்றும், இங்கு பலஇடங்களையும் பார்வையிட்டதினின்றும் அந்தக் கமிஷன் உண்மையை அறிந்துகொள்ளக் கூடியதாயிருந்திருக்கும்.

யாழ்ப்பாணத்தில் பூரணத்துவம் வாய்ந்த ஒரு பல்கலைக்கழகம் நிறுவவேண்டுமென்பது நீண்டகாலக் கோரிக்கை. ஐம்பது வருடங்களுக்குமதிகமான கோரிக்கையென்று கூடச் சொல்லலாம். யாழ்ப்பாணத்தில் ஒருசிறந்தபூரணத்துவம் வாய்ந்த பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டுமென்பதையும் சிறந்த பல்கலைக்கழகம் அமைப்பதற்கு யாழ்ப்பாணம்தான் மிகப் பொருத்தமான இடம் என்பதையும் யாழ் நூல் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் பல ஆண்டுகளுக்கு

வந்திருக்கிறார். பல்கலைக்கழகம் பற்றி விசாரணை செய்த நீடாம் கமிஷனும் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமென்று சிபார்சு செய்திருந்தது. என்ன காரணத்தாலோ இந்தச் சிபார்சுகளும் யோசனைகளும் இதுவரை நிறைவேற்றப்படாமல் இருந்துவந்திருக்கிறது. என்றாலும் ஒரு பல்கலைக்கழகம் அமைப்பது என்ற தீர்மானத்தின் மீது தான் டாக்டர் மலலசேகரா தலைமையிலான இந்தக் கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிற தென்றும் அந்த உறுதியுடன்தான் அந்தக் கமிஷனும் தனது விசாரணையைத் துரிதமாக நடத்திவருகின்றதென்றும் நம்புவதற்கிடமுண்டு.

உயர்கல்விபெறும் மாணவர்களின் தொகையைப் பொறுத்த அளவிலாவது யாழ்ப்பாணத்தில் புதிய பல்கலைக்கழகம் அமைக்கப் படவேண்டுமென்பதை எவரும் ஒப்புக்கொள்வர்.

எத்தனையோ விஷயங்களுக்காக எத்தனையோ கமிஷன்கள் நியமிக்கப்படுவதும் அந்தக் கமிஷன்கள் பலநாள் விசாரணைசெய்து பல ரூபாய்கள் செலவிட்டு பல பக்கங்களில் அறிக்கை தயாரித்து உரியவர்களிடம் சமர்ப்பித்ததும் அந்த அறிக்கைகள் மூலைக்குள் உறங்கிவிடுவதுண்டு. டாக்டர் மலலசேகரா தலைமையில் அமைக்கப்பட்ட இந்த விசாரணைக்கமிஷன் பற்றியும் மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்ததுண்டு. தேர்தல் காலம் நெருங்குவதால் தமிழ் மக்களைச் சமாளிப்பதற்காக எடுக்கப்பட்ட ஒரு கண்துடைப்பு நடவடிக்கையென்றும் சிலர் கருத்து வெளியிட்டனர்.

இந்தச் சந்தேகம் உறுதியாகிவிடக்கூடாது. இது கண்துடைப்பு நடவடிக்கையல்லவென்பதையும் மனப்பூர்வமாக மேற்கொள்ளப்பட்ட காரியமென்பதையும் மக்கள் உணர்ந்துகொள்

## உறுப்பினர் வசதிக்காக மேயர் ஏற்பாடு

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாணம மேயராக தெரிவுசெய்யப்பட்ட திரு. ரி. எஸ். துரைராஜா முதல் வேலையாக தினமும் சபைக்குவரும் சபை உறுப்பினர் தங்கி, தங்கள் அலுவல்களை செய்வதற்கான ஒழுங்குகளை செய்திருக்கிறார்.

உறுப்பினர்கள் தங்கள் அலுவல்களை கவனிக்க ஒரு தனி அறை இல்லாததால் பெரிதும் கஷ்டப்பட்டுவந்தனர்.

உதவி மேயரின் அறையில் தான் கடந்தகாலத்தில் தாங்கள் தங்கியிருந்து அலுவல்களை பார்த்தோமென்றும் மேயர் எங்களுக்கு வசதியாக ஒருஅறையை ஒதுக்கியிருப்பதாகவும் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

உறுப்பினர்களுக்கான அறையில் கடதாசி, பென்சில் பேனை மற்றும் வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டிருப்பதாகவும் அந்த உறுப்பினர் தெரிவித்தார்.

சில வரியிறுப்பாளர் நேற்று மேயரை நேரில் சந்தித்து தங்கள் குறைகளை எடுத்துக்கூறினார்கள் மேயர் ஒவ்வொருவராக அழைத்து அவர்களின் குறைகளை விசாரித்தார்.

# செய்திச் சுருக்கம்

### காரைதீவுமக்கள் ஆட்சேபம்

நிந்தாவூரில் காரியாதிகாரியின் அலுவலகம் திறக்கப்படுவதனை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம் செய்த காரைதீவு மக்களைக் காரைதீவு எல்லையில் வைத்துப் பொலிசார் தடுத்துநிறுத்தினர். 250பேரைக் கொண்ட சனக்கூட்டம் நிந்தாவூருக்குச் சென்று உள்நாட்டு அமைச்சர் திரு. டபிள்யூ தகநாயக்கா புதுஅலுவலகத்தைத் திறந்து வைத்ததைத் தடுக்க முயன்றதாகச் சொல்லப்படுகிறது.

### கூட்டுறவு ஊழியர் பிரச்னை

இலங்கையிலுள்ள சுமார் பதினையாயிரம் கூட்டுறவு ஊழியர்களும் தங்களுக்கு ஒருமுகப்பட்டசம்பளத்திட்டமொன்று அமுல் நடத்தப்படவேண்டுமென்றுகிளர்ச்சி செய்யத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்று தெரியவருகிறது.

### தேங்காய்த்துருவல் விலைகுறைப்பு பிரச்னை

வர்த்தக அமைச்சர் திரு கியூ. பெர்னாண்டோவுக்கும் தேங்காய்த்துருவல்ஏற்றுமதியாளர்களுக்குமிடையேவிலை விஷயத்தில் போட்டா போட்டி ஏற்பட்டிருப்பதனால் 8 கோடி ரூபா வெளிநாட்டுச் செலாவணியை இழக்கக் கூடிய நிலையில்இலங்கை இருக்கிறதாம்: ஏற்றுமதியாளர்கள் இருத்தல் ஒன்று குறைந்த விலையான 65 சதத்திற்கு வாங்க வேண்டும் என்று அமைச்சர் வற்புறுத்துகின்றார். ஆனால் சந்தையில் நிலவும் விலைக்கே

### உபவானொலி நிலையங்கள்

இலங்கையின் கிழக்குப் பகுதியில் உப வானொலி நிலையங்களை நிறுவுவதற்கு அரசாங்கம் முன்வந்துள்ளது, இதற்காக சுமார் 80 லட்சம்ரூபாவைசெலவழிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அரசாங்கத்தின் இந்தப் புதிய திட்டத்தின்படி கந்தளாய் அம்பாறை ஆகிய இரண்டு இடங்களிலும் உபவானொலி நிலையங்கள் நிறுவப்படும்.

### அகதிகள் அதிருப்தி

கொழும்பு கொம்பனித் தெருவில் உள்ள சட்ட விரோதக் குடியேற்றக்காரர் தடுப்பு முகாமில் உள்ளவர்களின் வசதிக்காக அங்கு ஓர் உணவுச் சாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது. தடுப்பு முகாமில் உள்ளவர்கள் தங்கள் உறவினர்களிடம் இருந்து பணம் பெறமுடியுமானால் அவற்றைப் பெற்று உணவுச்சாலையில் தான் பொருட்களை வாங்க வேண்டும் என்று அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து தடுப்பு முகாமில்உள்ளவர்களும் அவர்களது உறவினர்களும் மிகுந்த அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

நாட்டுக்கு

### தொண்டுள்ளம் கொண்டவர்கள் வேண்டும்

மாவிட்டபுரம், வியாழன்

"அரசியல்துறையில் தான்

## பாதகமான பகுதிநீக்கப்பட்ட பின்னரே ஆதரித்தோம்

### அடையாள அட்டை உடுவில் எம். பி. விளக்கம்

மாவிட்டபுரம், வியாழன்

அடையாள அட்டை மசோதாவை நாம் ஆதரித்தது தமிழருக்கு துரோகம் என்பது தவறு. தமிழருக்குப் பாதகமான சரத்து நீக்கப்பட்ட பின்னரே நாம் அதை ஆதரித்தோம்.

இவ்வாறு தமிழரசுக்கட்சிக் கருத்தரங்கம் ஒன்று காங்கேசன்துறை பட்டினசபை மண்டபத்தில் நடந்தபோது உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் கூறினார்.

பட்டினசபை உபதலைவர் திரு. எஸ் நாகரத்தினம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில், இந்நாட்டு மக்கள் தேர்தலில் ஆள்மாறாட்டம் செய்யாதிருப்பதற்காக அரசாங்க தேர்தல் ஒழுங்குக்குழு பல ஆண்டுகளுக்கு முன் இந்த அடையாள அட்டை நிபந்தனையைக்கொண்டு வந்தது. அந்த நேரத்தில் நிதி வசதி இல்லாததாலும் எல்லா மக்களையும் புகைப்படம் பிடிக்க வசதியில்லாத காரணத்தால் அச்சட்டம் அமுல் நடத்தப்படவில்லை.

இச்சட்டத்தின்படி எந்தப் பிரஜை மீதும் அடையாள அட்டை இல்லை என்று குற்றம் சாட்டவோ நாடு கடத்தவோ முடியாது தீர விசாரணை செய்யச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. அதனால் எவருக்கும் பாதகமில்லை.

சந்தேக நபராகக் கருதுபவரை கட்டாயமாக நாடு கடத்தும் சட்டத்தை ஆட்சேபித்தோம். அதனை இந்திய அரசும் எதிர்த்தது. அதன் பயனாக பிரஜா உரிமை கிடைக்கவிட்டாலும் அரசாங்கத்தின் அனுமதியுடன் சில காலம் வாழ வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. எஸ், ஜே. வி. செல்வநாயகம் எம். பி., செனட்டர் சு, நடராசா உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

# விவசாயப் புலம்

## மழை செய்த சதியா?

இது போன்ற ஒரு படுமோசமான ஏமாற்றத்தை யாழ்ப்பாணத்து நெல்விளையும் கமக்காரர் ஒருபோதும் எதிர் பார்க்கவேயில்லை! இப்படியும் செய்துவிடக்கூடுமா என்று அவர்கள் கனவிலும் நினைக்கவில்லை! போனவருடம் மழைக்குறைவினால் போதிய நெல்விளையவில்லையே என்று கவலைப்பட்டிருந்தவர்கள், இவ்வருடம் ஆவணி முதல் திகதியிலிருந்து மார்கழி ஈறாக தொடர்ச்சியாக மழை மழை பொழிந்ததைப் பார்த்து, போன வருடத்து வட்டியையும் சேர்த்து இவ்வருட வேளாண்மை விளாசித் தள்ளப்போகிறதென்று மனப்பால் குடித்துக்கொண்டிருந்தார்கள்.

விதைத்த நாள் தொடக்கம் வெட்டும் நாள்வரை நிலத்தில் ஈரம் இருந்து வந்து புல்பூண்டுகளின் அட்டகாசத்தை வெள்ளம் அடக்கி

முடியுமா? வானம்பார்த்த பூமியில் மழை பெய்தாலும் குற்றம் பெய்யாவிட்டாலும் குற்றம் என்றால் கமக்காரர் தான் என்ன செய்வார்கள்?

யாழ்ப்பாணப் பகுதிகளில் நெல் விளைச்சல் குறைவுக்கு இம்முறை இதுவே காரணமாயிருந்த போதிலும்பொதுவாக விளைச்சல் குறைவுக்கு இருந்துவரும் ஒரு காரணம் நல்ல இன நெல்லை விதைக்காமல் விடுவதே. சோறு ருசியாயிருக்க மாட்டாது என்பதற்காக பிற இடங்களில் அமோகமான விளைச்சலை கொடுத்துவரும் புதிய இன நெல் வகைகளைஇங்கு பயிரிட விரும்புகிறார்களில்லை' பழைய பச்சைப் பெருமாளையும் மொட்டைகறுப்பனையும் விட்டு விட இவர்களுக்கு பிரியமில்லை.

அரசாங்க நெல்ஆராய்ச்சி நிலையங்களில் பல புதிய இன நெல்வகைகளை கண்டு

## ஜயாளன் எழுதுவது.

சென்ற இரண்டு நாட்களாக யாழ்ப்பாணத்தில் 'நல்ல' மழை. இந்த மழையால் கமக்காரர்களில் பலர் அதிக கஷ்டநஷ்ட மடைந்துள்ளனர். நெற்கதிர்கள் முற்றி அரிவு வெட்டும் வேளையிலே இந்த மழை வந்து அதிக நஷ்டம் ஏற்படுத்துவதாயும், வைக்கோல் நனைந்து நாசமாவதாயும் ஒரு கமக்காரர் கவலைப்படுகிறார்.

மா முருங்கை இம்மரங்களிலே பூத்துள்ள பூக்கள் இந்த மழையால் கொட்டுண்டுபோவதாயும், அதனால் இம்முறை மாம்பழத்துக்கும் முருங்கைக்காய்க்கும் அதிக தட்டுப்பாடு ஏற்படலாமென்றும் மற்றோர் அன்பர் வருந்துகிறார்,

பலநாட்களுக்குப் பின் இந்த மழை பெய்ததால், பூமி சூடு தணிந்துள்ளதாக ஒருவர் இந்த மழையைப் போற்றி வரவேற்கின்றார்.

மழை வேண்டியதுதான். ஆனால் அகாலத்தில் பெய்யும் மழையால் மக்களுக்கு நன்மையை விட அதிக தீமையே ஏற்படுகின்றது இதைத் தவிர்க்க மனிதன் ஏதும்செய்ய முடியுமா? விஞ்ஞானம் உதவுமா? அல்லது தெய்வமே என்று சும்மா இருப்பதைத் தவிர வேறு வழியில்லையா?

0 0 0

அமெரிக்காவில் நியூயார்க் நகரில் இம்மாதம் 1-ம்திகதி இந்திய ஸ்தானிகர் மண்டபத்தில்தியாகராஜ சங்கீதத் திருவிழா நடைபெற்றதாம். அமெரிக்க பாரதி சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற இவ்விழாவில், மிடில்டவுன், கானக்டிராட், பிலடெல்பியா இவ்விடங்களிலிருந்து பாடகர்கள் வந்து கலந்து கொண்டனர். ஐ. நா. ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஸி. வி. நரசிம்மன் அவர்கள் விழாவை ஆரம்பித்து. தியாகராஜ கீர்த்தனைகளின் அருமை பெருமைகளைப் பற்றிப் பேசினார்.

எம்.ஏ. கல்யாணகிருஷ்ண பாகவதர், முத்துலெட்சுமி, வான்றெஸ் இவர்கள்வீணைக் கச்சேரி செய்தனர். ரெங்கநாயகியும் ஹெரால்ட் பலர்ஸும் வாய்ப்பாட்டு. வி. தியாகராஜன், சங்கரன் வயலின். டி. ரங்கநாதன் மிருதங்கம் வாசித்தனர். சங்கத் தலைவர் டாக்டர் ஏ ஜயராமன் வரவேற்புரை நிகழ்

பாராட்டுவதுடன், இது நல்ல வெற்றிபெற வாழ்த்துகின்றோம்,

0 0 0

இலங்கை வேந்தன் இருபது தோளற, விலங்கல் சேர் விரலான் விசயமங்கை வலஞ்செய்வார்களும் வாழ்த்திசைப்பார்களும், நலஞ்செய்வாரவர் நன்னெறி நாடியே.

— அப்பர்சுவாமிகள்

### குற்றவாளி

ஊர்காவற்றுறை, வியா

சுழிபுரம் பண்ணாகம் வாசியான ஒருவர் பிச்சைக்காரர்போல் நடித்து காரைநகர் வடக்கில் உள்ள வீடு ஒன்றில் துணிகள் பித்தளைப் பாத்திரங்கள் திருடியதாக குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி எதிரியை குற்றவாளியாகக் கண்டு தண்டனை விதிப்பதை இம்மாதம் 25-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

ரயிலில்மதுபானம்

### மந்திரிசபை நிராகரிப்பு

கோட்டை, வியா.

ரயில்களிலுள்ள உணவு வண்டிகளில் மதுபானம் விநியோகம் செய்வதைத் தடுக்க வேண்டும் என ரயில் பிரயாணிகள் சங்கங்கள் பல போக்குவரத்து அமைச்சுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தன. இதையடுத்து போக்குவரத்து அமைச்சர் திரு. ஈ. எல். பி, ஹுருள்ளே ரயில்களில் மதுபானம் விநியோகம் செய்வதைத் தடைசெய்வது சம்பந்தமாக மந்திரி சபைக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார்.

போக்குவரத்து அமைச்சரின் மகஜரைப் பரிசீலனை செய்த மந்திரிசபை அதனை நிராகரித்துள்ளது. ரயில் உணவு வண்டிகளில் மதுபான விநியோகத்தை முற்றாகத் தடைசெய்வதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## தமிழக செய்திகள்

### இந்திராவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகம் அமைப்பதற்கு யாழ்ப்பாணம்தான் மிகப் பொருத்தமான இடம் என்பதையும் யாழ் நூல் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் பல ஆண்டுகளுக்கு முன்னரே மிகத் தெளிவாக எடுத்துக்கூறி யிருந்தார். இலங்கைப் பல்கலைக்கழக உபவேந்தராக இருந்த சேர் நிக்கலஸ் அட்டிகலையும் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டுமென்பதைப் பல தடவைகளிலும் வற்புறுத்தி யாகிவிடக்கூடாது. இது கண்துடைப்பு நடவடிக்கை யல்லவென்பதையும் மனப்பூர்வமாக மேற்கொள்ளப் பட்ட காரியமென்பதையும் மக்கள் உணர்ந்துகொள்ளக்கூடியமுறையில் இந்த விசாரணைக்கமிஷன் தனது சிபார்சுகள் அடங்கிய அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்கவேண்டும். அரசாங்கமும் அதை காலதாமதமின்றிச் செயல்படுத்த வேண்டும்.

# உலக வங்கிக்கு இலங்கை பாடசாலை விவசாய விபரம்

பருத்தித்துறை, வியாழன் இம்மாதம் 28-ம் திகதி இலங்கைக்கு வரவிருக்கும் உலகவங்கிக் குழுவுக்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கும் நோக்கத்துடன் அகில இலங்கையிலுமுள்ள பாடசாலைகளில் நடைபெறும் விவசாயம்பற்றிய பல தகவல்களை கல்விமா அதிபதி திரு. வீ. துரைசிங்கம் விவசாய ஆசிரியரிடமிருந்து கோரியுள்ளார்.

இத்தகவல்களின் அடிப்படையில் பாடசாலைகளில் எவ்வாறு விவசாயத்தை விஸ்தரிக்கலமென இக்குழு ஆலோசனைகளைத் தெரிவிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## யாழ் மாணவரும் கலந்து கொள்வர்

பருத்தித்துறை, வியா. அடுத்த மாதம் 3-ம்திகதி தொடக்கம் ஐந்து நாட்கள் [illegible]ரை தியத்தலாவையில் [illegible]க்கவிருக்கும் 'கடெற்' [illegible]யில் யாழ்ப்பாணப் [illegible]ாணவர்கள் இவ் [illegible]ம் தொகையா [illegible]ள்ளவிருப்ப [illegible]. இம்முகா [illegible]யினருக்கு [illegible]ணுவப் [illegible]சிக்கப் [illegible]

## 'பயிற்சியின் பலன்'

யாழ்ப்பாணம், வெள்ளி 'கட்டுப்பாடான சிந்தனை கல்வியாகின்றது. கட்டுப்பாடே ஒழுங்கான பயிற்சி ஆகிறது. பயிற்சியினுல் ஒருவன் உள்ளச்சக்தியை அடைகின்முன். பயிற்சியால் ஈஸ்வரத் தியானம் ஒருவனை உண்மை நிலையை அறியும் இடத்துக்கு இட்டுச் செல்கின்றது. இவ்விதமான பயிற்சியை ஒவ்வொரு சைவ சமயியும் கடைப்பிடித்து ஒழுகுதல் வேண்டும்.'

இவ்வாறு கொழும்பு ராமகிருஷ்ணமடத்தைச் சேர்ந்த ஸ்ரீ ரங்கானந்த சுவாமிஜி யாழ் மத்திய கல்லூரியில் இந்துமாமன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட விசேட கூட்டமொன்றில் உரையாற்றியபோது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், ஒருவன் வாழ்க்கையில் உண்மைப் பொருளை உணருவதற்கு வழிகாட்டியாக அமைவது சைவசித்தாந்தம் என்றும் இறைவன் எமக்கு அளித்த பகுத்தறிவைக் கொண்டு நல்லது எது தீயது எது என்பதைப் பகுத்தறிந்து நம் உள்ளத்தைப் பயிற்சியிலீடுபடுத்த வேண்டும் என்றும் இப்பயிற்சிக்கு இளமைக் காலமே மிகச்சிறந்தது என்றும் கூறினுர்.

ஊர்காவற்றுறை, வியா வடபகுதியில் தனித்தியங்கும் கல்லூரிகளில் ஒன்றுன ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் புதிய அதிபராக வண பிதா பி. என். அல்பிரெட் நியமனம் பெற்றுள்ளார்.

[illegible] லிமிட்டெட் ஸ்தாபனத்தரால் [illegible] கோவில்மேலை வீதி 63-ம் இலக் [illegible]ளது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு [illegible] திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

ங்கை இருக்கிறதாம். ஏற்றுமதியாளர்கள் இருத்தல் ஒன்று குறைந்த விலையான 65 சதத்திற்கு வாங்க வேண்டும் என்று அமைச்சர் வற்புறுத்துகின்றுர். ஆனுல் சந்தையில் நிலவும் விலைக்கே தங்களால் வாங்கமுடியும் என்று ஏற்றுமதியாளர்கள் கூறுகின்றனர்.

''மூலாதார உற்பத்திப் பொருள்களுக்குச் சர்வதேச அடிப்படையில் விலைகள் நிர்ணயிக்கப்படல் வேண்டும்'' என்று தெங்குச் சபைத் தலைவர் திரு. எஸ். ஆர். டி. சில்வா அமைச்சருக்குத் தெரிவித்துள்ளார். தேங்காய்த் துருவலுக்கு குறைந்த விலை நிர்ணயிக்கும் அமைச்சரின் முடிவிற்கு இலங்கை தெங்குசபைஎதிர் நடவடிக்கை எடுக்கத் தயாராகிக் கொண்டிருகிறதாம்.

## ஜெர்மனிக்கு மேசைவிரிப்பு ஏற்றுமதி

மேற்கு ஜெர்மனிக்கு 160,000 மேசைவிரிப்புகள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட விருக்கின்றன. சிறுகைத்தொழில் கிராம அபிவிருத்தி இலாகாவிற்கு இதற்கான ஆடர் கிடைத்துள்ளது.

## டிராக்ரர்—பஸ் மோதல்

இராணுவத்துச்குச் சொந்தமான டிராக்டர் ஒன்று நேற்று மாத்தறையை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது மோதரை என்ற இடத்தில் வைத்து எதிரேவந்து கொண்டிருந்த இ. போ. ச. பஸ் கண்டக்டர் உட்பட எண்மர் பலத்த காயங்களுடன் வெலிகாமம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். மற்றும்பலர் சிறுகாயங்களுக்குள்ளாஞர்கள். பஸ்முற்ருகச் சேதமடைந்துள்ளது.

## மேலும் ஆங்கில உதவி ஆசிரியர்கள்

வசதியற்றபகுதியில்உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் பொருட்டு, கடந்த ஜனவரியில் சுமார் 1,600 ஆங்கில உதவி ஆசிரியர்களுக்குக் கல்வி அமைச்சினுல் நியமனம் வழங்கப்பட்டது இவர்களில் 500 பேர்இந்த நியமனங்களை விரும்பாமல் தமது பாடசாலைகளுக்குச் சென்று கடமையாற்றவில்லையாம். நியமனங்களை ஏற்றுக் கொள்ளாதவரின் இடத்திற்கு வேறு ஆங்கிலஉதவி ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

## [illegible] கொண்டவர்கள் வேண்டும்

மாவிட்டபுரம், வியாழன் ''அரசியல்துறையில் தான் பற்றிக் கொள்ளும் கொள்கைக்காக நேர்மையோடும் உண்மையாடும் உழைத்து வரும்மக்கள்தொண்டனுக்கு நீங்கள் வரவேற்பு அளிப்பது மிகப்பொருத்தம். நண்பன் வி. பொன்னம்பலம் அரசியலில் மாறுபட்ட கருத்துக் கொண்ட போதிலும் அவருடைய அறிவும் ஆற்றலும் தொண்டுமனப்பான்மையும் நம்மை எல்லாம் கவர்ந்து விட்டது என்றே கூறவேண்டும்.''

இவ்வாறு அளவெட்டியில் மல்லாகம் கிராமசபைத்தலைவர் திரு. வி. பொன்னம்பலத்துக்கு நடத்தப்பட்ட வரவேற்புக் கூட்டமொன்றில் கலந்துரையாற்றுகையில் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் கூறினுர்.

அளவெட்டி தேன்தமிழ் விளையாட்டுக்கழக ஆதரவில் இப் பாராட்டுவிழா நடைபெற்றது.

திரு. தர்மலிங்கம் மேலும் பேசுகையில், இவர் உள்ளூர் ஆட்சி மன்றம் ஒன்றில் உதாரண தலைவராக அனைவருக்கும் விளங்குகின்றுர். இவருடைய தலைமையில் இயங்கிவரும்அ. ப. நோ. கூட்டுறவுச் சங்கம் நாடுமுழுவதுக்கும் பெருமை தேடித் தந்துள்ளது. இவர்போன்று தொண்டுள்ளம் கொண்டவர்கள் எமது நாட்டுக்குப் பலர் வேண்டும்.

கல்லூரி அதிபராகஇருக்க வேண்டியவர்அதைத்துறந்து அரசியல் வாதியாகவும் தலைசிறந்த தியாகியாகவும் வாழ்கிருர் என்றுர.

திரு. எஸ். சிறீதரன், திரு சிவநேசன் வண. பிதா சுப்பிரமணியம் ஆகியோரும் திரு. பொன்னம்பலத்தைப் பாராட்டிப் பேசினர்.

## நோய்தாங்காது தற்கொலை

பருத்தித்துறை, வியா. கரவெட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி கந்தசாமி (30வயது) என்பவர் தம்மைப் பலகாலம் வாட்டிய நோய் காரணமாக நச்சுத் திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

இ. போ. ச சாரதியாகிய இவர் இரு குழந்தைகளின் தந்தை என விசாரணையில் தெரிவிககப்பட்டது. மரண விசாரணை அதிகாரி திரு ஏ. கே. இராமநாதன் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

டிருந்தார்கள்.

விதைத்த நாள் தொடக்கம் வெட்டும் நாள்வரை நிலத்தில் ஈரம் இருந்து வந்தது. புல்பூண்டுகளின் அட்டகாசத்தை வெள்ளம் அடக்கி வந்தது. பூச்சி மருந்து அடிக்கவேண்டிய நிர்ப்பந்தமும் உண்டாகவில்லை. பலர் வயல்களுக்கு நல்ல உரமும் போட்டிருந்தார்கள். அப்படியிருந்தும் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லை.

நெல் விளையும் பகுதிகளிலுள்ள பல கமக்காரரை விசாரித்தபோது வழக்கமான சாதாரண விளைச்சலே கிடைத்திருக்கிறது. சிலர் பரப்பும் பறையும் தான் என்று ஏக்கத்துடன் கூறினுர்கள். சிலர் ஒன்றரைப் பறைக்கு மேல் அடிக்காது என்கிருர்கள். கூடிய தொகையான ஒன்றரைப் பறையை வைத்துக்கொண்டாலும் சராசரியாக ஓர் ஏக்கருக்கு முப்பத்தாறு பறைதானே அடித்திருக்கிறது! ஐம்பது என்றே வைத்துக்கொள்வோம். 150, 160 என்று அடிக்கும் முருங்கனும் மின்னேரியும் எங்கே, யாழ்ப்பாணம் எங்கே? இந்த ஏமாற்றத்துக்கு காரணம் என்ன?

எல்லோரும் ஒருமித்து ஒரே ஒரு காரணத்தையே கூறுகிருர்கள். மழை தான் இந்த சேஷ்டையைப் புரிந்திருக்கிறது. ஆச்சரியமாய்த் தான் இருக்கிறது. ஆனுல் உண்மை அது தான். மழை வெள்ளம போட்டதால் வேளாண்மை குறையவில்லை. அது வேறுவிதமாகத் தாக்கியிருக்கிறது.

பயிர் குடலை கக்கும் பருவம் வரை நல்ல மழை இருக்கவேண்டும். பின் பூ விடும் காலத்தில் அடியில் வெள்ளம் தங்கி நிற்கவேண்டுமே ஒழிய மேல்மழை அதிகம் பெய்யப்படாது. இவ்வருடம் நெல் பூத்து வந்தகாலத்திலும் நல்லமழை பெய்து கொண்டிருந்ததால் பூக்கள் அநேகமாக கழுவப்பட்டு மகரந்தப்பொடியை இழந்து விட்டன. இதன் பலனுக கதிர்களில் மணி உண்டாகவில்லை. வந்த கதிர்கள் பெரும்பாலும் சப்பியாகிவிட்டன. மழை இல்லாதிருந்தால் காற்ருேடு காற்ருக மகரந்தப் பொடியும் கலந்து பயிர்களில் இனச் சேர்க்கை உண்டாகியிருக்கும் இந்தச் சேர்க்கை சரியான முறைப்படி நடவாதது தான்விளைச்சல் குறைவுக்கு முக்கியமான காரணம். காய் மலடு பத்தும் இந்த நோயைநீர்ச்சாவி என்றும் குறிப்பிடுவார்கள்.

விஞ்ஞானரீதியாகஇதற்கு ஒருவிதமருந்தும் கிடையாது பெய்கிற மழையைத் தடுக்க

ளில்லை. பழைய பச்சைப் பெருமாளையும் மொட்டைக கறுப்பனையும் விட்டு விட இவர்களுககு பிரியமில்லை.

அரசாங்க நெல்ஆராய்ச்சி நிலையங்களில் பல புதிய இன நெல்வகைகளை கண்டு பிடித்து கமக்கரரருக்கு சிபார்சு செய்கிருர்கள். தென்னிந்தியாவில் இன்னுமொருபடி முன்னேற்றம் காணப்படுகிறது. அங்குள்ள பெரிய பண்ணைக்காரர் தங்கள் சொந்த அனுபவத்தாலும் ஆராய்ச்சியாலும் வருடந்தோறும். புதிய நெல் வகைகளை கண்டுபிடிக்கிருர்கள்.

சமீபத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு நெல்லினம் ஒரு ஹெக்டாருக்கு 5219 கிலோ விளைச்சல் தருகிறதாம். எங்கள் கணக்கின்படிக்கு இது ஏக்கருக்கு 125 பறையாகிறது. சுவையாலும் இது சிறந்ததாம். இதற்கு தமிழக முதலமைச்சரின் பெயரை தழுவி கருணு என்று பெயர் வைத்திருக்கிருர்கள்,

எங்கள் கமக்காரரும்பழையதையே தழுவிக் கொண்டிடிராமல் எப்பொழுது தான் புதியமுறைகளை கையாண்டு ஆராய்ச்சி செய்யும் பக்குவத்துக்கு வரப் போகிருர்களோ.

—கலப்பை

## 6 மாத சிறைத் தண்டனை

மட்டுவில், வியா கைதடி தாலிக்கொடிதிருட்டுவழக்கில் எதிரிகள் இருவருக்கும் தலா ஆறுமாத சிறைத்தண்டனையை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு கே. விக்கினராசா வழங்கியுள்ளார்.

சாவகச்சேரிப் பொலீசாரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் கைதடியைச்சேர்ந்த இராமலிங்கம் தம்பிஐயாவினது மனைவியின் தாலிக் கொடியை அதேஇடத்தைச் சேர்ந்த சீந்தில், இலட்சுமணன் ஆகிய இருவரும் திருடியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தார்கள்.

இந்த வழக்கை சாவகச்சேரிமாஜிஸ்திரேட்திரு கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணை முடிவில் எதிரிகளைக் குற்றவாளிகளாகக் கண்டு தலா 6மாதம் சிறைத் தண்டனை அளித்து தீர்ப்புவழங்கினுர்.

திருடிய தாலிக் கொடியை உயவரிடம் திருப்பிக் கொடுக்கும்படியும் நீதவான் உத்தரவிட்டார்.

ஸும் வாய்ப்பாட்டு. வி. தியாகராஜன், சங்கரன் வயலின். டி. ரங்கநாதன் மிருதங்கம் வாசித்தனர். சங்கத் தலைவர் டாக்டர் ஏ ஜயராமன் லரவேற்புரை நிகழ்த்திஞரென்று சென்னை 'ஹிந்து' பத்திரிகையில் வெளியான ஒரு நியூயார்க் செய்தி கூறுகிறது.

நமது தேவார திருவாசக விழாக்களும் அமெரிக்கா உள்ளிட்டுப் பல வெளிநாடுகளிலும் நடைபெறும் காலமும் வரக்கூடும். அவற்றின் மகிமைகளையும்: இசைச் செல்வத்தையும் தக்கபடி உணர்ந்தால். அந்த விழக்களையும் அவர்கள் நடத்தி பயனடையக்கூடுமல்லவா?

0 0 0

''இசை அருவி'' என்ற பெயருடன் ஒரு தமிழ் சஞ்சிகை பொங்கல் மலராக யாழ்ப்பாணத்தில் வெளியாகியுள்ளதைக் கண்டேன். இசைக்கலைஞர்களின் எண்ணிக்கை ஈழத்தில் வரவரப் பெருகிவருகிறது. இசைபயிலும் ஆர்வம் இங்கு பொது மக்களிடையே அதிகமாகியுள்ளது. இசை சம்பந்தமான பல கட்டுரைகளும் கவிதைகளும் கலந்து பாயும் அந்த அருவி, இசைக்கலையை இங்கு வளர்த்துப் பரப்பவும் இசைக்கலைஞர்களின் குறைகளைத் தீர்க்கவும் பயன்பட வேண்டும். இவ்வித கலைச் சஞ்சிகை ஈழத்தில் வெளியாவது இதுவே முதலாவது. இதை வெற்றிகரமாக பயனுள்ள முறையில் நடத்திச் செல்ல கலைஞர்கள் பொது மக்கள் இவர்களது ஆதரவு தொடர்ந்து கிடைக்குமென்று நம்புவோம்.

0 0 0

காந்தி நூற்ருண்டு ஞாபக நூல்கள் என்ற தலைப்பில் ஐந்து புத்தகங்களை 'இளம்பிறை'யின் ஆதரவில் அரசு பிரசுர கர்த்தாக்கள் வெளியிடும் விழா, வருகிற ஞாயிறன்று மாலை கொழும்பு தப்பிரபேன் ஒட்டலில் நடைபெறுவதாக ஓர் அழைப்புக் கிடைத்துள்ளது.

அழைப்பிதழே அழகாகவும் கவர்ச்சியாகவும், நவீன முறையில் இருப்பதைப்பார்த்ததும் அந்த நூல்களை வாங்கிப்படிக்கவேண்டுமென்ற தூண்டுதல் ஏற்படுவதாக உள்ளது. பல பிரபல ஆசிரியர்கள் இதைத் தொகுத்துள்ளனராம்.

காந்தி தரிசனம், மாணுக்கரின் காந்தி. காந்தி பாமாலை, காந்தீயக்கதைகள் காந்தி போதனை என்ற ஐந்து நூல்களும் அன்று ரூ. 10 மலிவு விலைக்குக் கிடைக்குமென்று அறிவித்துள்ளனர். காந்திய கருத்துக்களை தமிழில் பரப்பும் இந்த நன்முயற்சியைப்

# தமிழக செய்திகள்

## இந்திராவுக்கு வேண்டுகோள்

சென்னை, பெப். 19 ''தீவிர இடதுசாரிகளின் பேச்சைக் கேட்டு நமது வெளிநாட்டு வாணிகத்தையும் சர்வதேச உறவையும் பாதிக்கக்கூடிய எந்த நடவடிக்கையையும் எடுத்து விடவேண்டாம்'' என்று இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்திக்கு அகில இந்திய உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவரான திரு பிரான்லால்பள்டேல் நேற்று முன் தினம் வேண்டுகோள் விடுத்தார். சென்னை அகில இந்திய உற்பத்தியாளர்கள் சங்க காலாண்டுக் கூட்டத்தை அவர் ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

## அண்ணு கல்யாணமண்டபம்

திருச்சி, பெப். 19 திருச்சியிலிருந்து சுமார் 15 மைல் தொலைவில் உள்ள குளித்தலையில் கட்டப்பட்டுள்ள அண்ணு கல்யாண மண்டபத்தை தமிழ்நாடு முதலமைச்சர் திரு கருணுநிதி திறந்து வைத்தார்.

'நான் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தபோது இந்த மண்டபத்துக்கு அடிக்கல் நாட்டினேன். இப்போது முதலமைச்சரான பின்பு நானே இம் மண்டபத்தை திறந்துவைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்' என்று திரு, கருணுநிதி இவ் வைபவத்தில் கூறினுர்.

## பொலிசார் கைப்பற்றினர்

மதுரை, பெப். 19 மதுரையில் துப்பறியும் பொலிஸ் கோஷ்டியினர் ஒரு மில் தொழிலாளியை கைதுசெய்துஅவரிடமிருந்து 50 பைசாகள்ள நாணயங்களை தயாரிக்கப் பயன் படுத்தப்படும் அச்சி யந்திரத்தை கைப்பற்றினர்.

## ரயில்மோதியது இருவர்பலி

மதுரை, பெப், 19 மதுரையில் ரயில் கடவையை கடக்க முயன்ற ஒரு வயோதிபரையும், அவருக்கு வழிகாட்டிச் சென்ற சிறுவன் ஒருவனையும் ரயில் மோதிக் கொன்றது. வயோதிபர் ஸ்தலத்தில் பலியாஞர். சிறுவன் வைத்திய சாலையில்அனுமதிக்கப்பட்ட சில மணி நேரத்தில் மரணமாஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org